தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 3 | சென்னை 22-12-56 சனிக்கிழமை | இதழ் 17

நூர்ஜஹான்

-இராசன்-

★★★ பாதுஷா ஜஹாங்கீரின் நேர்மையான தீர்ப்புக்குச் சான்று கூறும் அற்புதமான சரித்திர நிகழ்ச்சி இது ★★★

வானத்திலே பிறை நிலா நீந்தி வந்துகொண்டிருந்தது. தாரகைகள் ஒன்றேடொன்று போட்டியிட்டுக் கொண்டு கண் சிமிட்டின. உப்பரிகையில் அமர்ந்துகொண்டிருந்த ஜஹாங்கிர் பாதுஷாவின் உள்ளம் வேதனையில் வெந்து கொண்டிருந்தது. கண் சிமிட்டும் தாரகைகளைப் போலவே அவரது துன்பங்களும் இதய அரங்கத்தில் துடித்துக்கொண்டிருந்தன. ஒரு புறம் தன் மகன் குர்ரம்! மறுபுறம் தன் அன்பு நாயகி நூர்ஜஹான். என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடினர். பலமுறை எண்ணிப் பார்த்தார். அவர் நெஞ்சம் வழிதெரியாமல் தவித்தது. மூளையைக் குழப்பிக் கொண்டார். என்றாலும் பயனென்றும் ஏற்படவில்லை. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார். "முடியாது! இதை அனுமதிக்கவே முடியாது!" என்று முணு முணுத்தது அவரது வாய். ஒலி பெரிதாகியது. உப்பரிகையே அதிர்ந்தது.

அயர்ந்த நித்திரையிலே இருந்த நூர்ஜஹானை அவரது ஒலி எழுப்பி விட்டது. திடுக்கிட்டு எழுந்தாள் அவள். பாதுஷாவின் ஓலத்தைக் கேட்டாள். பயந்தபடியே அவரருகில் வந்தாள்.

"பாதுஷா உடம்புக்கு என்ன ?"

"ஒன்றுமில்லை"

"ஒன்றுமில்லை யென்றால், பின் ஏன் இப்படி அலறுகிறீர்கள் ?"

"நான் அலறவில்லை !"

"என்னிடமே மறைக்கிறீர்கள்!"

"மறைக்கவில்லை நூர்!"

"அப்படியானல் ஏன் தயக்கம்?"

"இது ராஜாங்க விஷயம் !"

"சரி, கேட்கவில்லை! போதுமா?"

—உரையாடல் முடிந்தது. நூர்ஜஹான் மீண்டும் நித்திரைக்குச் சென்றுவிட்டாள். பாதுஷா உறங்கவில்லை! மீண்டும் சிந்தனையிலாழ்ந்தார்.

நூர்ஜஹானை, அவர் கண்ட நாட்களிலிருந்து அவருள்ளம் அவளையே நாடியது. ஜஹாங்கிரின் தந்தை அக்பர், அவரது எண்ணத்தை ஈடேற விடாமல் செய்து விட்டார். ஆனல் ஜஹாங்கிர் சாமர்த்திய மானவர். எப்படியோ நூர்ஜஹானைத் தன் அன்புக்கு உரியவளாக்கிக்கொண்டார். அதை நிறைவேற்றுவதற்குள் அவர் பட்ட பாடு கொஞ்சமல்ல. என்றாலும், நூர் வந்த மகிழ்ச்சியில் அந்தத் துயரங்களை எல்லாம் மறந்து விட்டார்.

நூர்ஜஹான் பாதுஷாவிடம் காட்டும் அன்பு அபரிமிதமானது. அரசியல் விஷயங்களில் கூட அவளது ஆலோசனை பாதுஷாவுக்குக் கிடைத்து வந்தது. வேற்று நாட்டாரின் படையெடுப்பை முறியடிக்கக் கூட அந்த விராங்கனையின் யோசனைகள் பயன்பட்டன. அரண்மனை வாசலிலே அவளது யோசனைப்படி தான் ஆராய்ச்சி மணி கட்டினர் பாதுஷா. அத்தகையவளிடம் கூட, தன் மனதில் உள்ள முடிவைச் சொல்லாமல் மறைத்தார். அவர் மறைத்து வைத்த விஷயம் சாமான்யமானதல்ல. சாம்ராஜ்யம் தனக்குப் பின் யாருக்கு என்ற தீர்மானம்தான் அது! தன் மூத்த மனைவியின் மகன் குர்ரத்துக்குத் தான், நியாயமாக சாம்ராஜ்யம் கிடைக்க வேண்டும். ஆனல் நூருக்கும் குர்ரத்துக்கும் உள்ள மனவேற்றுமையால், நூர் அதைத்தடுத்தாள். இந்த இக்கட்டான நிலை பாதுஷாவைத் திண்டாடவைத்தது. நூர்ஜஹான் தனது அன்புக்கு உரியவள் என்பதற்காக, பண்பற்ற செயலைச் செய்ய அவர் மனம் ஒப்பவில்லை. குர்ரத்துக்குத்தான் பட்டம் கட்டுவது என்ற முடிவுக்கு வந்தார்.

இரவு போய்க்கொண்டே இருந்தது. உறங்காமல் உட்கார்ந்து கொண்டிருந்தார். பாதுஷா. பொழுதும் விடிந்தது. அப்போதுதான் படுக்கைக்குச் சென்றார். விடிந்தது தெரிந்து நூர் எழுந்தாள். பாதுஷாவின் ஆழ்ந்த நித்திரையைக் கண்டாள். அவரது நித்திரையைக் கலைக்க மனமில்லை அவளுக்கு. பேசாமல் சென்று விட்டாள்.

"டுமீல்! டுமீல்!" என்ற சத்தம் கேட்டு விழித்தார்பாதுஷா. ஆமாம் நூர்ஜஹான்தான் துப்பாக்கி கொண்டு சுடப்பழகிக்கொண்டிருந்தாள். முதல் நாள்தான் பாதுஷா அவளுக்குத் துப்பாக்கிப் பயிற்சி செய்வித்தார். மறுநாளே அவள் திறமையாகப் பழகிவிட்டாள்! அதிசயமாக இருந்தது பாதுஷாவுக்கு!

எழுந்து வந்தார். நூரின் பின் பக்கம் வந்து நின்றார். பாதுஷாவை நூர் பார்க்கவில்லை. அவளது கவனம் துப்பாக்கிப் பயிற்சியிலே இருந்தது. எங்கோதொலைவிலுள்ள மரத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தாள்.

"அன்பே" என்ற குரல் கேட்டுத் திரும்பினள் நூர். பாதுஷா நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவர் 'சபாஷ்' சொன்னர். தனக்குப் பாராட்டுக் கிடைத்துவிட்டதை எண்ணி அவள் மகிழ்ந்தாள்.

★

பதினைந்து நாட்களுக்குப் பின்னர்! அரசவை கூட்டப்பட்டிருந்தது. அமைச்சர்கள், பிரதானிகள், அத்தனை பேரும் அமர்ந்திருந்தனர். அன்றுதான் பாதுஷா யாருக்கு இளவரசுப் பட்டம் கட்டப் போகிறார் என்பதைச் சொல்லவேண்டிய நாள். சேனதிபதி மகமத்கான் பரபரப்பாக இருந்தான். அவனது கண்ணும் காதும் பாதுஷாவின் வாயையே பார்த்துக்கொண்டிருந்தன. எங்கே, பாதுஷா நூர்ஜஹானின் எண்ணத்திற்கு இடங்கொடுத்து, குர்ரத்துக்குப் பட்டம் கட்டாமல் இருந்து விடுவாரோ என்று எண்ணி நடுங்கிக்கொண்டிருந்தான், மகமத்கான். நல்லவேளை! பாதுஷா அப்படிச் சொல்லவில்லை. தன் மகன் குர்ரத்துக்கே இளவரசுப் பட்டம் கட்டப் போவதாகச் சொன்னர். அவர் சொல்லி முடித்தவுடனே அவையிலே பெருத்த ஆரவாரம். அத்தனை பேரும் பாதுஷாவின் முடிவை ஆமோதித்தார்கள்.

அந்த நேரத்திலே ஆராய்ச்சி மணி அலறியது. அநீதி ஏதோ விளைந்துவிட்டது என்று எண்ணிப் பாதுஷா துடித்தார். குறிப்பறிந்த மகமத்கான் வெளியே சென்று பார்த்தான். யாரோ ஒரு பெண் தலைவிரி கோலமாய் இருந்தாள். அவள் கண்கள் அருவிபோல் கண்ணீர் சொரிந்தன.அவளது கரங்கள் ஆராய்ச்சிமணியின் கயிற்றை வெகு வேகமாக இழுத்துக்கொண்டிருந்தன. அவளது வேகத்தை ஆராய்ச்சிமணி அப்படியே எதிரொலித்துக்கொண்டிருந்தது.

மகமத்கானைப் பார்த்ததும் அந்தப் பெண் தன் முறையீட்டைச் சொல்ல முயன்றாள். மகமத்கான் அவளை அரசவைக்கு அழைத்துச் சென்றான். பாதுஷாவைக் கண்டவுடன் அவள் 'ஓ'வென்று அலறினள். அவளது அழுகை அவையோரின் மனதை இளகச் செய்தது.

"பெண்ணே! உனக்கு என்ன துயர் நேர்ந்தது. விவரமாகச் சொல். நாம் தீர்க்க முயற்சிக்கிறேம்" – பாதுஷா கேட்டார்.

அந்தப் பெண் அழுதுகொண்டே சொன்னாள். அழுகை அவளது குரலை அமுக்கியது. என்றாலும் ஒரு வழியாகத் தனக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்லிவிட்டாள். அவளும் அவள் கணவனும் துறையிலே துணி துவைத்துக்கொண்டிருந்தார்களாம். அப்போது எங்கிருந்தோ 'டுமீல்' என்று குண்டு வெடித்த சத்தம் கேட்டதாம். அடுத்த கணம் அவள் கணவன், 'ஐயோ' என்றலறி விழுந்தானம். அவன் உயிர் அந்த இடத்திலேயே பிரிந்துவிட்டதாம்.

பாதுஷாவுக்கு விஷயம் விளங்கி விட்டது. அவர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தார். அந்தப் பெண்ணை நோக்கி, "பெண்ணே! குற்றவாளியை இப்போதே கொண்டு வந்து உன் கண் முன் நிறுத்துகிறேன். நீயே குற்றவாளிக்குத் தண்டனை கொடு" என்று சொல்லிக்கொண்டே, தன் இருக்கையை விட்டு எழுந்து சென்றார். அதிகாரிகள் எல்லோரும், என்ன நடைபெறப் போகிறதோ என்று அஞ்சினர். அடுத்த கணம்பாதுஷா பரபரவென்று யாரையோ இழுத்துக் கொண்டு வந்தார். என்ன ஆச்சரியம்? அவரது அன்பு நாயகி நூர்ஜஹானைத்தான் அவர் இழுத்து வந்தார்.

"பெண்ணே! இதோ இவள் தான் உன் கணவனைக் கொன்றவள். இதோ இந்தத் துப்பாக்கி தான் உன் கணவனின் உயிரைக் குடித்திருக்கிறது! நீ என்ன தண்டனையைத் தர நினைக்கிறாயோ தந்து கொள்!" என்றார். அந்தப் பெண், என்ன பேசுவது என்[று] தெரியாமல் தவித்தாள். பாது[ஷா]வின் அன்புக்குரியவளா தன் க[ண]வனைக் கொன்று விட்டாள் என்[று] எண்ணினாள். அவள் உள்ள[ம்] அதை நம்பக் கூட மறுத்தது.

"என்ன யோசிக்கிறாய்? இதோ நானே தீர்ப்புச் சொல்லுகிறேன் உன் கணவனைக் கொன்று உன்னை விதவையாக்கியவளுக்கு ஏற்[ற] தண்டனை ஒன்றே ஒன்றுதான் உண்டு. இதோ! இந்தத் துப்பாக்[கி]யைப் பிடித்துக் கொள்! இவளது கணவனைக் கொன்று இவளை விதவையாக்கி விடு! இந்த[ா] பெண்ணே! உம்! நடக்கட்டும்" என்றார் பாதுஷா.

அவையிலிருந்தவர்கள் எல்லோ[ரு]ரும் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். பாதுஷா அப்படிச் சொல்வா[ர்] என்று அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. அந்தப் பெண் அழுதே விட்டாள். தனக்குத்தான் கேடு விளைந்து விட்டது. தன்னால் இன்னொரு உயிருக்கும் கேடு வரவேண்டாம் என்று எண்ணியது தூய அவளது உள்ளம்.

"பாதுஷா! என்னை மன்னித்து விடுங்கள்! நான் வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டாள். ஆனல் பாதுஷா ஒப்புக்கொள்ள வில்லை.

"பாதுஷா! குற்றவாளிக்கு நானே தண்டனைதரலாமல்லவா?"

"தாராளமாகத் தரலாம்! அதைத் தான் ஏற்கனவே சொல்லி விட்டேனே!"

"சரி! இந்தக் குற்றவாளிக்குத் தண்டனை...தண்டனை......" என்று இழுத்தாள். அமைச்சர்கள், அதிகாரிகள் அத்தனை பேரும் கலங்கிக் கொண்டிருந்தார்கள்.

"பாதுஷா! இந்தக் குற்றவாளிக்குத் தண்டனை...மன்னிப்பு!" என்றாள். அங்கிருந்த எல்லோரது கண்களிலும் நீர் துளிர்த்தது. பாதுஷாவின் கண்களில் கூடத்தான்! நூர்ஜஹானின் கண்கள் அந்தப் பெண்ணுக்கு நன்றி தெரிவித்தன. ★

நம்மேடை

26-12-56 புதன் மாலை 6 மணிக்கு தோழர் கோ. இளவரசு தலைமையில் இராயப்பேட்டை சீனிவாசபுரம் இரண்டாவது தெருவில் அறிஞர் அண்ணு, என். வி. நடராசன், முகவை. ஆர். எஸ். பாண்டியன், ம. கி. இராமலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கூட்டத்தில் கழகச் சார்பிலும், பெண்கள் படிப்பகச் சார்பிலும் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

இசைச்செல்வம் எழுதிய...

என் சரிதை

தென்திசையில் பிறந்து, அகிலமெலாம் இன்னிசைப் புலவரென வாழ்த்த, கீர்த்தியோடு வாழ்ந்தார் நமது இசை மன்னர் ராஜரத்தினம். நாதசுர உலகிற்கு ராஜாவாக இருந்து, இசையுலகில் ரத்தினமாக மின்னலிட்டு, நம்மையெல்லாம் துக்கத்திலாழ்த்திவிட்டுக் கண்களை மூடிவிட்டார். பத்தாண்டுகளுக்கு முன்பு அவரே அவரது வாழ்க்கை வரலாற்றை 'சக்தி' இதழில் எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையை இங்கே அப்படியே பிரசுரித்திருக்கிறோம். கலையை ஏழைகளின் பொதுச்சொத்தாக்கவேண்டும் என்பதும், தன்னம்பிக்கையுள்ள கலைஞனுக்கு அடிமைத்தனம் தேவையில்லையென்பதும் டி. என். ஆர். அவர்களின் முக்கியக் குறிக்கோள்களாக இருந்திருக்கின்றன என்பதை இந்தக் கட்டுரையான் அறியலாம். (ஆ-ர்.)

அறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் ராஜரத்தினம் அவர்களும் — மாநில மாநாட்டு மேடையில் —

தஞ்சாவூர் ஜில்லாவில் திருமருகல் என்ற ஒரு சிவஸ்தலம் உண்டு. அவ்வூரில் இசை வேளாளர் மரபில், திரு. சிவஞானம் பிள்ளை என்றொரு சிவபக்தர் இருந்தார். அன்னாருடைய குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக சங்கீதத் தொழிலிலேயே ஜீவனம் செய்து வாழ்ந்து வந்தனர். அன்னாருக்கு நடேசன் என்ற ஒரு ஆண் குழந்தையும், கோவிந்தம்மாள், கமலாம்பாள் என்ற இரு பெண் குழந்தைகளும் உண்டு.

நடேசன் என்ற ஆண் குழந்தைதான் இந்தியாவிலேயே, நாதஸ்வர உலகில் ஒப்பு உயர்வு அற்ற கர்னாடக சங்கீதத்தை நாத நிறைவோடு சகல விதத்திலும் மேன்மையாகும்படி செய்து திருமருகல் நடேச நாதசுரக்காரர் என்ற சிறப்புப் பட்டம் வாங்கியிருந்தார். அவருடைய முதல் சகோதரியான கோவிந்தம்மாள் என்றவரை அக்காலத்தில் திருமருகலில், சுமாராக நாதஸ்வரம் வாசித்து வந்த திரு. குப்புசாமி பிள்ளை என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள்.

திருமருகல் நடேச நாதசுரக்காரரின் சகோதரியான கோவிந்தம்மாள் என்பவருக்கு நான் பிறந்தேன். என்னுடன் பிறந்தது ஒரு சகோதரிதான். அன்னாரின் நாமகரணம் தினதயாளு அம்மாள். அக்காலத்தில் திருவாவடுதுறை, மடாலயத்து திருப்பெருந்திரு அம்பலவாண தேசிக சுவாமிகள் சிவஸ்தல யாத்திரைகள் செய்துகொண்டு திருமருகலில் வந்து தாமதித்தார்கள். அப்பொழுது நடேச நாதசுரக்காரருக்குப் பிராயம் இருபது. அன்றைய தினம் திரு. பண்டாரச் சன்னதிகளை ஆலயத்திற்கு வரவேற்றபோது திரு. நடேசபிள்ளை நாதஸ்வரம் வாசித்ததைக் கேட்டு, அகமகிழ்ந்து அன்னாரைத் தமது இருப்பிடமாகிய திருவாவடுதுறைக்கு வந்துவிடும்படி திருப்பெருந்திரு சன்னிதானமவர்கள் உத்தரவு செய்தார்கள். அன்று முதல் எங்கள் குடும்பம் திருவாவடுதுறைக்கு மாற்றப்பட்டு திருவாவடுதுறை வாசிகளானோம்.

திருப்பெருந்திரு அம்பலவாண சுவாமிகள் அன்பரசாட்சி செய்த அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தின் தமிழ் வித்துவான்களில் தலைசிறந்து விளங்கிய "தவத் தமிழ்த் திலகம்" திரிசிரபுரம் மகா வித்துவான் திரு மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்குப் பலமாணாக்கர்களாக விளங்கி, பாடம் கேட்டவர்களில் டாக்டர் உ. வே. சாமிநாத அய்யரவர்களும் ஒருவர்.

சங்கீத வித்துவான்களிலோ, மகா வைத்தினாதையர், திருக்கோடிக் காவல் பிடில் திரு. கிருஷ்ணையர், ராமநாதபுரம் பூச்சி அய்யங்கார் என்கிற சீனிவாச அய்யங்கார், கோனேரி ராஜபுரம் வைத்தியநாத அய்யர் முதலிய அநேக பெரிய வித்துவான்கள் சூழ்ந்திருந்தனர். அப்போது திருமருகல் நடேச நாதசுரக்காரருக்கு மேலே கண்ட வித்துவான்களைக் கொண்டு சங்கித சாஸ்திரத்தைச் சொல்லிக் கொடுக்கும்படி, திருப்பெருந்திரு மகா சன்னிதானமவர்கள் ஆக்ஞாபித்திருந்தார்கள். அப்போது திருமருகல் நடேச நாதசுரக்காரர் மன்னர்களாலும் மக்களாலும் புகழப்பட்டு தமது 28-வது பிராயத்தில் இயற்கை எய்திவிட்டார்கள். திரு. நடேச நாதசுரக்காரரும், இரண்டு தாரம் விவாகமாகியும் புத்திரப்பேறு இல்லாமையால், தமது சகோதரியின் புத்திரனாகிய என்னை அரசாங்கச் சட்டப்படி உயில் ஸ்வீகாரம் செய்து கொண்டார்கள். எனது ஸ்வீகார தந்தை இறக்கும்போது என் பிராயம் இரண்டரை. எனது சொந்தத் தகப்பனார் இறக்கும்பொழுது நான் பூவுலகில் பிறந்து மூன்று மாதங்களே ஆயிற்று. எனக்குக் கார்டியனாக இருந்த என் பாட்டனார் திரு. சிவஞானம் பிள்ளை என்னுடைய வளர்ப்பிற்கும், சங்கீததசிற்கும் காரணஸ்தராவார்கள். பிரக்கியாதி பெற்ற வித்துவானை 28-வது வயதில் பறிகொடுத்த குடும்பம் எப்படியிருக்கும்? நிர்க்கதியாய் தவித்தது. என் மாமா இறக்கும்பொழுது இருந்த சொத்தின் மதிப்பு சுமார் ஒரு லட்சம் ஆகும். என் மாமனார் அவர்கள் என்னை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டது சரியல்லவென்றும் சொத்து யாவும் தங்களுக்கே உரிமையுண்டென்றும் என் மாமனார் மனைவியர் இருவரும் கீழ்க் கோர்ட்டு முதல் ஹைகோர்ட்டு வரை வாதாடி, அதனால் பல ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தனர். முடிவில் கோர்ட்டாரவர்கள் நானே மேற்படி சொத்திற்கு வாரிசுதாரன் என்று தீர்ப்பளித்தார்கள்.

எனது 5-வது பிராயத்தில் பள்ளிக்குச் சென்று கல்வி பயில ஆரம்பித்தேன். இத்துடன் சங்கீதாப்பியாசமும் தொடங்கியது. மகா வித்துவான் திருக்கோடி காவல் உயர்திரு பிடில் கிருஷ்ணையர் அவர்களிடம் சிட்சை பயின்று கொண்டிருந்தேன். 8-வது வயதில் வாய்ப்பாட்டுக் கச்சேரி செய்ய முற்பட்டேன். கும்பகோணம் வித்துவான் மிருதங்கம் திரு. அழகன் நம்பி பிள்ளையவர்களும், குற்றாலம் மிருதங்க வித்துவான் திரு. குப்புசாமி பிள்ளையவர்களும் அநேக கச்சேரிகளுக்கு வாசித்து என்னைப் பெருமைப்படுத்தினார்கள். அதே சமயம் திருவாவடுதுறையில் பண்டார சந்நிதியவர்களாக வீருந்த திருப்பெருந்திரு அம்பலவாண தேசிக மகா சந்நிதானமவர்கள் என் வாய்ப்பாட்டைக் கேட்டு விட்டு உடனே ஆதீனம் கார்வார் திரு. சு. பொன்னுபிள்ளை அவர்களை அழைத்து, எனக்கு நாதசுரம் சொல்லிவைக்க வேண்டும் என்றும் வாய்ப்பாட்டு மட்டிலும் மடத்திற்குப் போதாதென்றும் நாதசுரமும் மிகவும் அவசியம் என்றும் அதை நான் அப்பியாசம் செய்யவேண்டுமென்றும் கார்வார் திரு. சு. பொன்னுபிள்ளை அவர்களிடமும், என் பாட்டனார் சிவஞானம் பிள்ளையிடமும் உத்தரவிட்டு, அவ்வப்போது வேண்டிய பொருள் உதவியும் திருப்பெருந்திரு மகாசந்நிதானமவர்கள் கிருபையோடு அளித்து வந்தார்கள். அந்தச் சமயம் மடத்தில் உற்சவ காலமாதலால் பல ஊர்களிலுமிருந்து சங்கீத வித்துவான்கள் வருவதுண்டு. நாதசுர வித்துவான் செம்பொன்னார் கோவில் திரு. ராமசாமி நாதசுவரக்காரர், நாகூர் திரு. சுப்பையா நாதசுவரக்காரர் இவர்களிருவரும் ஆதீனத்து விசேட காலங்களில் வந்து வாசிப்பார்கள். இரவும், பகலும், விடிய விடிய இவர்கள் வாத்தியங்களைக் கேட்டு ஆனந்திப்பதும் பகல் பூராவும் நாதசுவரத்தில் சாதகம் செய்வதும்தான் எனக்கு வேலை. என் 12-வது வயதில் திருப்பெருந்திரு மகாசந்நிதானமவர்கள் கார்வார் திரு. சு. பொன்னு பிள்ளை அவர்களை அழைத்து என்னை வாசிக்கச் சொல்லி அன்றுமுதல் என்னை ஆதீனத்து வித்வானாகச் சேர்த்தார்கள். அதுமுதல், திரு. செம்பொன்னார் கோயில் ராமசாமி நாதசுவரக்காரர், நாகூர் திரு. சுப்பையா நாதசுவரக்காரர், மதுரை திரு. பொன்னுசாமி நாதசுவரக்காரர், சிதம்பரம் திரு. வைத்தியநாத நாதசுவரக்காரர் இவர்களுடன் மடத்திலும் வெளியூர்களிலும் வாசித்திருக்கிறேன். சுருங்கச் சொன்னால் குழந்தையிலேயே துணிவு உண்டு. எல்லோரையும் விட நன்றாக வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் நிறைய உண்டு. பல வித்வான்களுடன் 13-வது வயதிலேயே போட்டியும் உண்டு. அப்போதே எனக்கு இந்தக் கட்டுப்பாட்டு சங்கீதத்தைத் தகர்த்தெறிய வேண்டும் என்ற எண்ணம் உண்டு. இப்படி இருக்கும் சமயம் தஞ்சை ஜில்லா கொங்கராய நல்லூர் பண்ணை பிள்ளையவர்கள் வீட்டில் பெரிய கல்யாணம் நடந்தது. அதில் ஐந்து நாளும் திரு. பூச்சி ஐயங்கார், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதையர், மதுரை புஷ்பவனம் அய்யர், திருக்கோடிகாவல் பிடில் கிருஷ்ணையர், திருச்சி பிடில் கோவிந்தசாமி பிள்ளை, மாமுண்டியா பிள்ளை, அழகன் நம்பி பிள்ளை, தட்சிணாமூர்த்திப் பிள்ளை இவர்களும், நான்கு நாள் வாசிக்க மன்னார்குடி சின்னப்பக்கிரி நாதசுவரக்காரரும் வந்திருந்தனர்.

நான் 14-வது வயதில் மேற்படி கச்சேரிகளைக் கேட்கவேண்டியதற்காக ஆதீனம் கார்வார் திரு. சு. பொன்னுபிள்ளை அவர்களும் என் பாட்டனார் சிவஞானம் பிள்ளையும் என்னை அழைத்துக்கொண்டு போயிருந்தார்கள். நான் ஒவ்வொரு நாளும் அவர்கள் செய்யும் கச்சேரியை அப்படி அப்படியே என் மனதில் ஆவாகனம் செய்தேன்.

திரு. சின்னப்பக்கிரி நாதசுவரக்காரரின் வாத்தியத்தைக் கேட்டதும் அடியோடு என் நாதசுரவரத்தை மாற்றினேன். அகாரசாதகம் ஆறு மாதங்கள் செய்தேன். எனக்கு இரத்தமாக வயிற்றுப் போக்கும் கண்டது. யாவரும் பயந்தனர். எனக்கு வாய்ப்பாட்டில் எதையும் சர்வசாதாரணமாகப் பாட முடியுமாதலால் நாதசுவர வாத்தியத்தை இன்று உலகத்தில் உள்ள நிலையில் என்னால் கொண்டுவர முடிந்தது.

— 10-ம் பக்கம் —

அருவி ஓய்ந்தது!

★

கண்ணதாசன்

''என்னிவன் வளர்த்த பேறு !
எப்படிப் பயின்ருன் இந்தச்
சின்னதோர் குழலுக் குள்ளே
செகத்தையே உருட்டும் பாடம் !
மன்னவன் இவனே ! நாத
மண்டலத் தரசே'' என்று
தென்னவர் போற்ற நாதச்
செந்தமிழ் குழலிற் கண்டோய் !

தாயினை இழந்து நாதம்
தவித்திட, தமிழர் வாடப்
போயினை என்ற சேதி
பொங்கியே செவியில் மோதச்
சேயினை இழந்த மாதர்
சிந்தையின் நடுக்கம் போல
ஆயின இதயம் உள்ளார்
அனைவரின் எண்ணும் கண்ணும் !

கையிலே இ[illegible]ரும்
காற்றிலே [illegible]ளும்
மெய்யிலே இசையா, மின்னும்
விழியிலே இசையா என்றே
ஐயநின் இசையைக் கேட்டோர்
அனைவரும் திகைப்பர் ! இன்று
கையறு நிலையிற் பாடக்
கருப்பொருள் ஆனய் ! ஓய்ந்தாய் !

குழலிலே இசைப்பாய், மாதர்
குரலெனத் தோன்றும், கீத
வழியிலே அழைப்பாய் ; கால்கள்
வரும், மனம் தொடரும் எங்கள்
விழியிலே செவியின் செய்கை
விளைந்திடத் தருவாய் ! இன்று
அழலிலே நிறுத்திப் போனய் !
அடுத்தெமை அழைப்பா ரில்லை !

''இதற்கிவன் ஒருவன் ; வேறு
எவனுமே இல்லை'' என்றே
எதற்குமே வரம்பு போட
இப்புவி சிறிய தன்று !
அதற்குநீ விலக்கு ! இந்த
அகிலமேல் வாழும் நாத
மிதக்குநற் குழலுக் கெங்கள்
வேந்தநீ ஒருவ னேதான் !

இருந்ததோர் இசையைக் கையில்
எடுத்துநீ வளர்த்தாய் என்றல்
வருந்துவம் வழக்கம் போல !
மறந்நாள் மறப்போம் ! ஆனல்
பிறந்ததோர் இசையை ஈண்டு
பெற்றவன் நீயே ஆனய் !
அருந்தமிழ் வாழும் மட்டும்
ஐய !எம் கண்ணீர் வாழும் !

பரிசுகள் ஆட நின்பாற்
பழகிய குழ[illegible]
வருகிருய் நீ[illegible]
மனதிலே [illegible]ரும்
'சரிகம-பதநி' யோடு
'ச'வென முடிந்து போகும்
குறுகிய சுரத்துக் குள்ளே
குவலயம் படைத்துப் போனய் !

செவியினில் ஓடி எங்கள்
சிந்தையில் ஓடி, இந்தப்
புவியெலாம் ஓடி, நின்பாற்
பொங்கிய 'தோடி,' வேறு
எவரிடம் போகும் ! ஐய !
இனியதைக் காப்பார் யாவர்?
அவிந்தநின் சடலத் தோடு
அவிந்தது தோடி தானும் !

மனம் ஒரு ஆட்டம் போடும்
மயிர்க்கால்கள் சிலிர்த்து நிற்கும் !
நிணம்தசை நார்கள் யாவும்
நிலைபெயர்ந் துணர்ச்சி பொங்கும் !
குணங்களும் மாறல் போலக்
குறிகளும் தோன்றும் ! நாதத்
தனியநின் 'மகுடி' கேட்டால்
தரணியே பாம்பாய்ப் போகும் !

அடாநான் மறந்தே போனேன் !
அன்புநின் பெயரைச் சொன்னல்
'அடாணு' மன்னா என்றே
அனைவரும் சொல்வர் ! அந்த
அடாணு, உனை ரிக்க
அடக்கிய சிதைக்குள் ஒடிக்
கெடாமல் வாழும் என்றல்
கேட்பவர் சிரிப்பர் ! உண்மை !

நாட்டையே கலக்கி வைத்து
நாளுக்கு நாள்வ ளர்ந்த
'நாட்டை'யைக் கொண்டே சென்ருய் !
ராகத்தில் அதற்கும் சாவு !
பாட்டென்ன தாள மென்ன
பண்மன்ன நியில் லாமல்
ஓட்டைதான் ! காம்போ திக்கும்
உடைந்தது கோட்டை ! ஐயோ !

தவுலுக்குக் கொஞ்ச நேரம்
தனிஆவர்த் தனங்கொ டுத்து
'கவுளி'வெற் றிலையில் நான்கைக்
கையிலே எடுத்து வாயில்
அவலெனக் குதப்பும் போது
ஆவர்த் தனம்மு டிந்தால்
தவுல்போலக் குழலை வாசித்
தவன்பாரில் ஒருவன் நீதான் !

நாட்டவர் போற்ற வாழும்
நல்லிசை வாணர் யாரும்
வேட்டியைத் துவைக்கும் போதும்
விடமாட்டார் தாளக் கட்டை !
வேட்டியா ! சிச்சி ! நீதான்
வீதியில் நடக்கும் போதும்
பாட்டுளார் 'ஆதி' தாளம்
படித்திட நடப்பா யன்றே !

ஒத்தூதும் பையன் கூட
உன்னரு கிருக்கும் போது
ஒத்துவாத் தியத்தில் ராகம்
ஊதிட முயல்வான் ! நீயே
கைத்தாளம் போடும் காட்சி
காண்பவர் உடம்பெல் லாமும்
'மெய்த்தாளம்' போடும் என்றல்
வேறென்ன முடியும் சொல்ல?

மேடைக்கு நீதான் ! உந்தன்
மேனிதான் ! இடுப்பைச் சுற்றும்
ஆடைதான் ! காதில் தொங்கும்
அழகிய கடுக்கன் தான் ! நல்
வாடைக்கு வாரிப் பூசும்
மார்புச்சந் தனந்தான் ! யாவும்
பாடைக்குள் ஒடுங்கிற் றெங்கள்
பார்வைக்கு மறையக் காணும் !

எப்படித் தழலில் உன்றன்
எழில்மேனி எரிந்த தையா !
அப்படி உனை ரிக்க
அழலுக்கேன் கடின நெஞ்சம் ?
செப்பிடி வித்தைக் காரர்
திரண்டுளார் ! அவரை விட்டுக்
கைப்பிடி யாக உன்னைக்
காலமேன் அழைத்த தையா ?

காலத்தால் மறைந்த பேர்உன்
கைக்குழல் நாதம் கேட்க
ஓலமிட் டழுதார் என்றே
உனைவந்து அழைத்த தையா ?
பாலமபோட் டவர்கள் வாழும்
பகுதிக்குப் போக இந்த
ஞாலமோர் வழிவ குத்தால்
நாங்களும் வருவோ மன்றே ?

''இசையெல்லாம் எங்கள் சொந்தம்''
என்றிருந் தவர்கள் நின்றன்
அசைவெல்லாம் இசையாய் மாற
அயர்ந்தனர் ! எதிலும் அன்னர்
வசை, குறை காண்பார் ! உந்தன்
வாய்ப்புறம் பொங்கி வந்த
இசையினிற் பணிந்தார் ! உன்னல்
எம்மையும் வணங்கு கின்றர் !

''நாட்டியத் துறைக்கு நாங்கள்
நாயகர்'' என்றர் ! ஆனல்
பாட்டியல் துறைக்குத் தம்மைப்
பறையறை விக்க வில்லை !
கூட்டிய ராச ரத்னக்
கோமகன் காதில் வீழ்ந்தால்
பாட்டிலே கொய்வான் என்றே
பயந்தனர் ! தளர்ந்தார் ! ஓய்ந்தார் !

பண்ணென்றும் சுருதி என்றும்
பலவகைப் பேதம் என்றும்
கிண்ணென்று மொழிவார் ! எம்மைக்
கீழ்மேலாய்ப் பார்ப்பார் ! உன்னை
முன்னின்று பார்த்தால் தங்கள்
மூச்சொடும் பேச்ச டங்கித்
தண்ணென்று குளிர்வார் என்றல்
தனியனே இனியார் வல்லார் !

வேண்டிய பலபேர் எம்மை
மிகச்சிறு வயதில் விட்டு
மாண்டனர் ; அப்போ தெல்லாம்
மனத்துயர் அதிக மில்லை !
ஈண்டுநின் மரணச் சேதி
இழைத்ததோர் துயரம் தன்னை
மீண்டொரு முறைநீ வந்தால்
விளங்குவாய் வேந்தர் வேந்தே !

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 ‖ 22—12—56 ‖ இதழ் 17

56,21,000!

சென்னை அரசியலாரின் வரவு செலவுத் திட்டம் வெளியாகி இருக்கிறது. 1957—58-க்கான இந்த இடைக்கால பட்ஜெட் குறித்துப் பலரும் பலவிதமாக கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களில்,

காங்கிரசாருக்குப் பெருந்தன்மை பிறந்திருக்கிறதென் போரும், டில்லியை நம்பித்தானாக வேண்டுமென்போரும் கூட இருக்கிறார்கள்.

முன்பெல்லாம் பட்ஜெட் வெளியாகிவிட்டால் மந்திரிமார் தங்களுக்கென்னவோ திடீரென்று புது கௌரவம் வந்துவிட்டதுபோல் நடந்து கொள்வார்கள். பட்ஜெட்டில் துண்டு விழுந்துவிட்டால் மக்களை மிரட்டுவார்கள். 'புதுவரி' என்று கர்ஜிப்பார்கள். ஆனால் காமராசர் சர்க்காரின் பட்ஜட் எந்தவிதமான பரபரப்புமில்லாமல், நிம்மதியாக இருக்கும் கடலில் மிதந்துவந்த மரக்கலம் போல் கரைசேர்ந்திருக்கிறது. அதற்கும் காரணம் கண்டுபிடிக்க முயன்றால் எளிதிலே கண்டுபிடித்து விடமுடியும். வரவு ரூ. 52 கோடியே 64 இலட்சத்து 63 ஆயிரம் என்றும் செலவு ரூ. 57 கோடியே 70 இலட்சத்து 84 ஆயிரம் என்றும் துண்டுவிழும் தொகை ரூ. 5 கோடியே 6 இலட்சத்து 21 ஆயிரம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. துண்டுவிழும் தொகை பற்றி சட்டசபையில் அவ்வளவாகப் பேசப்படவில்லை. மந்திரிகள் கூடப் பேசவில்லை.

சர்க்கார் ஊழியர்களுக்கு நிவாரணம்!
கிராமாதிகாரிகளுக்குச் சலுகைகள்!
கிறிஸ்துவர்களுக்குக் கல்விச் சலுகை!

—என்று பட்ஜட்டின் சில அம்சங்களை - வெள்ளம் பூசிய அம்சங்களைப்படித்துக் காட்டியபிறகும்கூட துண்டுத்தொகை பற்றி மந்திரிகள் குறிப்பிடவில்லை என்றால் அதற்கு உட பொருள் இல்லாமலில்லை.

காமராசர் சர்க்காருக்கு இதுதான் கடைசி பட்ஜட் என்பதை காமராசரும் அவரது மந்திரி சபையும் நன்குணர்ந்திருப்பது புத்திசாலித்தனமாகும். துண்டுத் தொகையைப் பற்றிப் பேசவேண்டியவர்களும், அதை ஈடு செய்ய, புதிய வரிகளை விதிக்க வேண்டியவர்களும், அடுத்து உருவாக இருக்கும் புதிய மந்திரிசபையினர்தான் என்பதைக் காமராசர் தெரிந்துகொண்டிருப்பதும் இடைக்காலத்திலே தேர்தல் என்ற திசைகாட்டி இருப்பதையும் அவர் உணர்ந்து அதற்கேற்ப பட்ஜட் பிரச்சினையில் ஊமையாக இருப்பதும் கெட்டிக்காரத்தனமாகும். ஆனால் மக்கள் மறப்பரோ காங்கிரசின் மாட்சியை! வரப்போகும் சர்க்கார், இப்போதுள்ள சர்க்காரைப் போலவே டில்லியின் ஏவலாளாக இருக்குமானால் துண்டுவிழும் தொகையைப் புதிய சென்னை சர்க்கார்தான் கட்டவேண்டும்; அதற்கு மக்கள்தான் வரி செலுத்தியாகவேண்டும் - என்பதைத் தமிழர்கள் உணராமலில்லை. உணர்ந்திருக்கிறார்கள். ஓடட்டும் இரண்டு மாதங்கள் என்று காத்திருக்கிறார்கள்.

என் சரிதை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியிருந்த காலம். நானும், இச்சுருதிகளிலேயே வாசித்து வந்தேன். இந்தத் தங்க நாத சுரத்தை எடுக்க வேண்டுமென்றும் இரண்டுகட்டை சுருதிக்குக் குறைக்க வேண்டுமென்றும் நினைத்து நாதஸ்வரம் செய்வதில் தேர்ச்சி பெற்ற திருவானைக் காவல் சுப்ரமண்ய ஆசாரியை அழைத்து எனக்குத் தோன்றிய படி முழுவதும் மரத்திலேயே நாதசுரம் செய்யச் சொல்லி வாசித்துப் பார்த்ததில், எனக்குத் திருப்தியாகவே அமைந்திருந்தது. நாதசுர வாத்தியத் திற்குக்கீழேபோடப்படும் அனசு பெரியதாக யிருந்தால் சரியாக வருமோ என நினைத்தேன். ஒருநாள் என்வீட்டிலுள்ள கிராம போன் குழாயை (புனல்) எடுத்து அதில் நாதசுரத்தை வாசித்துப் பார்த்தேன். ரொம்பவும் பிரமாதமாக இருந்தது. மறுபடியும் ஆசாரியை அழைப்பித்து நான் சொல்லுவதுபோல் அனசு அமைக்கச் சொல்லி, அதைப் பொருத்தி வாசித்துப் பார்த்தேன். பிறகு உலகெங்கிலும் என் நாதசுரப் பாணியிலேயே நாதசுரம் அமைக்கப் பட்டு எல்லோராலும் வாசிக்கப் படுகிறது.

சினிமாவினால் பல காரியங்களுக்கு நன்மையுண்டு. ஆனால் கர்னாடக சங்கீதக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு நாதசுரக்காரர்களோ, பாடடுக்காரர்களோ சினிமாப் பாட்டுக்களையும் மகுடிகளையும், ஆபாசமான பாட்டுகளையும், வாசிப்பதனால் சங்கீத உலகத்திற்கே பெரும் தீங்கு இழைக்கிறார்கள் என்று சொல்லலாம்.

ஒரு வருடம், திருச்செந்தூர் முருகன் கோயில் மாசி மாதத் திருவிழாவுக்கு இரண்டு நாள் கச்சேரி செய்வதற்காகச் சென்றேன். சண்முக விலாசத்தில் என்னுடைய கச்சேரி நடந்து கொண்டிருந்தது. சுமார் 10000 ஜனங்கள் திரண்டு வந்திருந்தனர். பாதிக் கச்சேரி நடக்கும் போது என் மேடைக்கு நேரே சந்தர்ப்ப வசமாக நான் பார்க்கும் போது, அங்கு ஒரு பதினெட்டு வயதுப்பெண் கச்சேரியை வெகு சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். கச்சேரி முடிந்ததும் என் நண்பர்களை அந்த யுவதி யாரென்று கேட்டதில், தூத்துக்குடி யென்றும் சுவாமிக்கு பிரார்த்தனை செய்ய வந்திருப்பதாயும் சொன்னார்கள். இசை வேளாளர் மரபு எனவும் தெரிந்தது. இதற்கிடையில் என்னுடைய ஜாதகைக்கும் அந்தப் பெண்ணின் ஜாதகைக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்தன. நடந்து முடிந்தது. பெண்ணையே நேரில் கண்டு 'என்னை விவாகம் செய்து கொள்கிறாயா?' என்று கேட்டேன். தடை ஏதுமில்லாமல் 'செய்துகொள்கிறேன்' என்றாள். உடனே தூத்துக்குடி வந்து இந்துமத தர்மப்படி விவாகம் நடந்து திருவாவடுதுறை வந்து சேர்ந்தோம். இவ்வளவு மனைவிகளுக்கும் சலிப்பு வராமலும் குடும்பக்கவலை எனக்கும் ஏற்படாமலும் குடும்பத்தை நடத்திக் கொண்டு வருகிறவள் என் முதல் மனைவி சாரதாம்பாள் தான். குமாரன் சிவாஜிக்கு இப்போது வயது பன்னிரண்டு ஆகிறது. அவனுக்கு வாய்ப் பாட்டு சிக்ஷை நடந்துவருகின்றது.

திருவாவடுதுறையில் இப்போது இருந்து அருட்செங்கோல் செலுத்திவரும் 20-வது பட்டமாகிய திருப்பெருந்திரு அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், தமிழ் அபிவிருத்தியிலும் சங்கீத அபிவிருத்தியிலும் பூரணமான பொறுப்பு ஏற்று, பெரும் பொருள்களைச் செலவு செய்து நல்ல பணியாற்றி வருகிறார்கள். மேலும் சங்கீதத்திற்காகவே திருவாவடுதுறையில் ஆதின சங்கீத வித்தியாலயம் என்று ஒரு குருகுலம் ஏற்படுத்த முயன்று வருகிறேன். திருப்பெருந்திரு மகா சந்நிதானமவர்கள் இதை முடித்து வைப்பார்கள் என நம்புகிறேன். ★

தென்றல்
பொங்கல் மலர்
ரூ. 1-8-0.
டிசம்பர் 28-ம் தேதிக்குள் முன்பணம்
அனுப்புவோருக்குத்தான் மலர் அனுப்பப்படும்.

தேர்தல் நாடகம்

தமிழகம்-அன்றும் இன்றும்

திரைக்குப்பின்

கூட்டுக்குரல்-பாட்டு

வாழ்க வாழ்க வாழ்கவே !
வாழ்க வாழ்கவே !
வண்ணமின்னும் தமிழர் நாடு
வாழ்வு பெற்று வீறுகொண்டு (வாழ்க)

திங்கள் போற்றிப் பரிதி போற்றி
சிந்துமழை அமிழ்து போற்றி
தங்கவண்ணச் செந்நெல் கொண்டு
தரணி மக்களோடு உண்டு (வாழ்க)

இமயமீது கொடி பொறித்து
எதிர்த்த வீணர் தலைபறித்து
சமயமாக அன்பு கண்டு
தலைநிமிர்ந்து வாழ்ந்த மக்கள் (வாழ்க)

அலைகள் கண்டு வேறுநாடர்
அஞ்சி வாழ்ந்தபோதில் அந்த
அலைகடந்து தொழில்புரிந்து
அரசுகொண்ட எங்கள் நாடு (வாழ்க)

தமிழில் மூன்று கனியில் மூன்று
தரணியாண்ட அரசு மூன்று
அமிழ்த மன்ன குறளில் மூன்று
அழகு கண்ட எங்கள் நாடு (வாழ்க)

[திரை தூக்கப்படுகிறது.]

காட்சி: 1.

பின்னணித் திரை : தர்பார் உருவம்.

[சோழமன்னன் கொலு வீற்றிருக்கிறன். அமைச்சர், மற்றும் ஐம்பெருங் குழுவின் உறுப்பினர்கள் அமர்ந்துள் ளனர்.]

ஒருவன் : (எழுந்து) வாழிய சோழ மன்னர் ! வாழிய பொன்னி நாடு ! வாழிய புலிக்கொடி !

அமைச் : (எழுந்து) ஐம்பெருங் குழுவினரே ! அறிஞர் பெரு மக்களே ! வாழ்க ! ஈழத்துப் போர் முடிந்து இன்றோடு இரண்டு திங்களாகிறது. வெற்றிகொண்ட நாட்டிலிருந்து கப்பமாக வந்த பொருள்களை, நாட்டு மக்களுக்கே வழங் கும்படி மன்னவர் பணித்தார். மக்களும் பெற்று மகிழ்ந் தனர். அதிலும் போரில் மாண்ட வீரர்களின் குடும்பத் தினர், எல்லையற்ற மகிழ்வு கொண்டனர். வறுமை என் பதே எள்ளளவுமின்றி, நாம் வாழ்கிறோம் என்பதால், மனங் குறுகிய மற்ற நாட்டவர், எப்போது போர் தொடுப் போம் என்று தவிக்கிறார்கள். போர் வந்தால், நம் வாளுண்டு தோளுண்டு ! வலிவும் நமக்குண்டு ! ஆயினும் எந்த நேரமும் போர் வரலாம் என்று மக்களை எச்சரிக்க வேண்டும். அதற்குமுன் அணிவகுப்புகளை வலிவுபடுத்து வதுபற்றிச் சிந்திக்கவே இங்கு நாம் கூடியிருக்கிறோம். முதலில் புகார்த்துறைமுகக் காவலர், தன் பகுதி நிலையை விளக்குவார் !

[அவர் அமரல்.]

துறை காவலர் : (எழுந்து) மன்னவர் வாழ்க ! மண்டலம் வாழ்க ! புகார்த்துறை முகம் போதிய பாதுகாப்புடன் திகழ்கிறது ! வாள்வீரரை ஏற்றிச்செல்லும் சிறிய தோணிகள் ஆயிரத்து முந்நூறு எந்த நேரமும் தயாராயிருக்கின்றன. பகைவர் வரக்கூடிய கடல்வழி ஆராயப்படுகிறது. துறையருகில் இருந்த வாணிபக்கடைகளை, மற்றைய வாணிபத் தெருக் களின் அருகில் மாற்றிவிட்டோம். கடல்வழிப் படை யினரை அந்த இடங்களில் குடியேற்றியுள்ளோம். ஆணை யிட்டால் போதும். அனைவரும் பறப்பர் !

[அமர்கிறர்.]

அமைச் : (எழுந்து) நன்று ! 'மன்னார்குடி'க் களத்தலைவர்...

[அமர்தல்.]

களத்தலை : (எழுந்து) வாழிய ! களம் செவ்வனே முறைப்படுத்தப்பட் டுள்ளது. பகைவர் நிற்கக்கூடிய இடத்தையும், நம் படை கள் தங்கும் இடத்தையும் ஒரே அளவில் பக்குவப்படுத்தி யுள்ளோம்.

[அமர்கிறர்.]

அமைச் : இப்போது உலைக்கூடத் தலைவர்...

உ. தலை : (எழுந்து) வாளாயிரம் ; வில்லாயிரம் ; வெண்கல வேல் பதினாயிரம் ; குத்தீட்டி ஏழாயிரம் குறைவின்றி உள்ளது !

அமைச் : நன்று ! கரிப்படையும் பரிப்படையும் காலாட்படையும் எப் போதும் தயாரென முன்கூட்டியே அறிவித்திருக்கிறர், தளநாயகர் !

மன்னன் : போர் வந்தால், வங்கத்திலிருந்து வரலாம். அதனால்தான் கடல் வழியையும் களத்தையும் ஒரே சமயத்தில் கவனிக்க ஆணையிட்டேன். அத்துடன் இத் தஞ்சையிலும், உறந்தை யிலும் புகாரிலும் வாணிபம்புரியும் வங்கமாந்தரைக் கண் காணிப்பதும் அவசியம். அவர்கட்குத் தொல்லை தராத வகையில் கண்காணிப்பு நடத்தும்படி உளவறிவார்க்குக் கூறுக ! படை வீரர்களில் புதிதாக மணமுடித்தவர்கள் இருந்தால் இந்தப் போருக்கு மட்டும் அவர்கள் வர வேண்டாம் !

ஒருவர் : (எழுந்து) உறந்தை முக்கூட்டணியின் தலைவர் இங்கு வந்துள்ளார்...ஆம்; நம் வில்லாளர்தான் ! அவரும் புதிதாக மணமானவரே !

வில் : (எழுந்து) மன்னிக்கவேண்டும் மன்னவ ! நான் இல்லக் கிழத்தியிடம் விடைபெற்றுக்கொண்டுதான் உறந்தை யிலிருந்து புறப்பட்டேன். திரும்பிவிட விரும்பவில்லை.

[மன்னன் சிரித்து, எழுந்து வில்லாளர் அருகில் வந்து அவரைக் கட்டித் தழுவுகிறன். "சோழமன்னவர் வாழ்க !" "புலிக்கொடி தழைக்க !" என்ற முழக்கம்,]

—திரை விழுகிறது—

காட்சி : 2

பின். திரை : வீதி

[அமைச்சர், ஒரு பிரதானி வில்லாளர், கடல்துறைத் தலைவர், மன்னர் குடிக்களத்தலைவர், உலைக்கூடத்தலைவர் ஆகியோர் நுழைவு...]

அமை : ஆமாம்...வில்லாளரே ! மணம் முடிந்து மூன்று நாள்தான் ஆகிறது ! மனம் அங்கில்லையா ? ஏன் அதற்குள் ஓடி வந்தீர் !

வில் : "வரப்போகிறது போர் !" என்றார், வங்கஞ் சென்று திரும்பிய மாங்காட்டங்குடியார் ! எப்பொழுது என்றேன். இப்பொழுதேகூட என்றார். தங்குமா மனது ! தவித்தது ! புறப்பட்டேன்.

உ. கூ. தலை: துணைவி...?

வில் : துவ்விய மானவள்; சின்ன வயசு. கார்வண்ணர் மகள் தான்...

க. தலை : காதல் மணமோ ?

வில் : வேறென்ன ! கட்டாய மணம் சோழமண்ணிலா ?

அமை : எங்கு கண்டீர் ?

வில் : எடுத்துச் சொன்னால், அமைச்சரையாவுக்குப் பழைய நினைவுகள் மீளலாம் !

ம, கு. க. தலை: சொல்லுமே ! இளைஞர்களும் கேட்கிறோம் !

அமை : ஏன், எனக்குத்தான் அப்படி என்ன வயதாகிவிட்டது !

வில் : யார் சொன்னது, வயதாகிவிட்டதென்று !. அட, காதலுக்கு வயதுதான் ஏது ஐயா !

[சிரிப்பு]

வில் : கார்த்திகைத் திங்கள் முதல்நாள்......தென்னுறந்தையில் எனது இல்லம். மாலைநேரம். வெளித்திண்ணையில் வீற்றிருந்தேன். வண்டி ஒன்று பெண்டிரைச் சுமந்து சென்றது. அவரிடையே ஒருத்தி, அன்னம்போல் அமர்ந் தாள். யாரென்று கேட்டேன் தோழனைப் பார்த்து ! ஊர் உறந்தை; உத்தமர் பெண் என்றான்...

எண்ணித் தவித்தேன்; ஏங்கினேன். மார்கழி நீராட்டு வந்தது. மாதர்கள் பொன்னிக்கரையில் கூடினர். இயற்கையாக நான் அங்கு சென்றேன்.

அமை : மாதர் கூடும் இடத்திற்கு இயற்கையாகவா சென்றீர் ?

உ. கூ. தலை : மனம் இழுத்திருக்கும் !

[சிரிப்பு]

வில் : தனியிடத்தில் உலாவினேன் ! என்ன சொல்வேன் ! தையல் அங்கு தன் தம்பியொடும் நின்றாள் !

—விளக்கு அணைகிறது—
—அனைவரும் உள்ளே செல்லல்—
—திரை தூக்கப்படுகிறது—

கண்ணதாசன்

(தொடரும்)



மனம் போல வாழ்வு

சரசு திடுக்கிட்டாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். அந்த வாலிபனைத் தவிர வேறு யாரும் அங்கு இல்லை

"யார் நீ?" என்று கேட்டாள்.

"பார்த்தால் தெரியவில்லை?" என்று பக்குவமாகப் பதில் சொன்னான் அவன்.

சரசு எழுந்தாள். தான் இருக்கும் இடத்தையும் சூழ்நிலையையும் ஓரளவு புரிந்துகொண்டாள். அவள் இதயம் துடித்தது.

"ஏன் வந்தாய்?" என்று கேட்டாள், அவனைப் பார்த்து.

"ஒரு பெண் தனியாக இருக்குமிடத்திற்கு வாலிபர்கள் ஏன் வருவார்கள்? தெரியாதா உனக்கு?" என்று வசனம் பேசினான் அவன்.

"போய்விடு!" என்றாள் அவள் ஒரு வார்த்தையில்.

"போவதா? உன்னைவிட்டா? தேடக் கிடைக்காத கனியே! தேடித் திரிந்தேன் உன்னை! எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தமே இன்பப் பொருத்தம் என்று அலைந்தேன். இன்று கண்டேன்! இன்பமே! மறக்காதே' என்னை ஏற்றுக்கொள்!"—என்று முழு வசனத்தையும் ஒப்புவித்தான் அவன். தினசரி சினிமாப் பார்த்திருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அவன் அவளை நெருங்கினான். அவள் விலகினாள். இருவரும் மாறி மாறி ஓடினார்கள். இறுதியில் அவள் கையைப் பிடித்துவிட்டான் அவன். அவள் பதறினாள், கதறினாள். "அம்மா! அம்மா!" என்று அலறினாள். கருணையின் காதுகள் செவிடாகிவிட்ட உலகத்தில் கவலைக் குரலுக்கும் காற்றுக்கும் ஒரே மதிப்புத்தான். அவள் குரலைக் கேட்டுக் காப்பாற்ற வருவாரில்லை. அவளுக்காக அனுதாபப்படக்கூடியவர்கள் நுழைய முடியாத இடத்தில் அவள் அடைபட்டுக் கிடந்தாள். ஆகவே அந்த வாலிபன் அவள் குரலைக் கேட்டுக் கலங்கவில்லை. கைப்பிடியைத் தளர்த்தவில்லை. அவள்தன் பலம் கொண்ட மட்டும்போராடினாள். இறுதியில், தொங்கிக்கொண்டிருந்த புகைப் படத்தை ஒரு கையால் எடுத்தாள். ஓங்கி அவனை அடித்தாள். அவன் சுருண்டு விழுந்தான். சரசு ஓடிப்போய்க் கதவைத் திறக்க முயன்றாள். ஆனால், மறுபடியும் அது பூட்டப்பட்டிருப்பதை அறிந்தாள். யாரும் இல்லாத வேளை! எப்படியும் தப்பிவிடலாம் என்ற தைரியம் பிறந்தது. முந்தானையை இடுப்பில் வளைத்துக் கட்டிக்கொண்டு, பலம் கொண்ட மட்டும் கதவை இழுத்தாள். படபடவென அது அடித்த சத்தத்தைக் கேட்டு, தெருவிலே போய்க்கொண்டிருந்த சிலர் நின்றார்கள். காமுகர்களும் காவாலிகளும் அதிகமாக உலவும் அந்தச் சந்தில் இது மாதிரி ரகளைகளுக்கு முக்கியத்துவம் இருப்பதில்லை. காரணம், தீச் செயல்களின் எல்லையையே தொட்டுவிட்ட பலரும் அந்தத் தெருவில்தான் குடியிருந்தார்கள். கதவு அடித்துக்கொள்வதும், கற்கள் பறப்பதும், நள்ளிரவில் கார்கள் வந்து நிற்பதும் காலரை முதல் நாற்பது ரூபாய் வரை பெண் வாடகை அங்கே பேசப்படுவதும், நடு நிசியில் டீ சாப்பிடுவதும், குடித்துத் தடுமாறிக் கும்மாளம் போடுவதும், வயதானவர்களும் இளைஞர்களும் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு மாட்டுச்சாணத்தில் புரளுவதும், அந்தத் தெருவுக்குச் சர்வ சாதாரணம். பகல் விபச்சாரம் கூடப் பழகிப்போன ஒன்றுதான். என்றாலும் அந்தத் தெருவில் நடந்தவர்களில் புதியவர்கள் இந்தக் கதவிடிக்கும் சத்தத்தைக் கேட்டு நின்றார்கள்.

"ஐயா! ஐயா!" "வாங்க! வாங்க!" "ஆபத்து, ஆபத்து!" "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்று கதறினாள், கதவிடுக்கு வழியாக அவர்களைப்

12

பார்த்த சரசு. நின்றவர்களில் இரண்டொருவர் கதவருகில் ஓடிவந்தார்கள். உடனே அந்தத் தெருவைச்சேர்ந்தசிலர் அவர்களிடம் வந்து, "போங்கய்யா, புருஷன் பெண்டாட்டி சண்டையில் உங்களுக்கு என்ன வேலை? ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும். பிறகு எல்லாம் சரியாய்ப் போயிடும்! நீங்க ஏன் தலையிடறீங்க?" என்று அவர்களைத் துரத்தினார்கள். நல்லவர்களுக்குள் ஒற்றுமை இருப்பது போல, தீயவர்களுக்குள்ளும் ஒரு ஒற்றுமை உண்டு. அதுவே ஒரு தனிச் சமுதாயம்! அதற்கெனச் சட்டதிட்டம், கட்டுக்கோப்பு எல்லாமும் உண்டு. அந்தச் சமுதாயத்தின் சில உறுப்பினர்கள்தான் யாரென்று தெரியாத தங்கள் சகபாடியைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொண்டார்கள். காப்பாற்ற வந்தவர்கள், அவர்கள் சொன்னதை நம்பித் திரும்பினார்கள். அவர்கள் திரும்புவதைக் கதவிடுக்கின் வழியாகக் கவனித்த சரசு பலம் கொண்ட மட்டும் கதறினாள். ஆனாலும் அவர்கள் போனவர்கள் போனவர்கள்தான்.

சரசுவின் இதயம் துடியாய்த் துடித்தது. தனால் அடித்து வீழ்த்தப்பட்ட காமுகனைத் திரும்பிப் பார்த்தாள். எங்கே அவன் மீண்டும் எழுந்துவிடுவானோ என்ற பயம் அவளுக்கு! ஆனால் அவனோ அசையாமல் கிடந்தான். மீண்டும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டசரசு தப்பிச் செல்வதற்கு வேறு வழி இருக்குமா என்று தேடினாள்.

இதற்கிடையில், காப்பாற்ற வந்து திரும்பிச் சென்ற ஒருவன், மனதில் ஏதோ சந்தேகம் தட்டி, மெதுவாக, போலீஸ் ஸ்டேஷனில் போய்ச் சொல்லிவிட்டான். குற்றங்கள் குறைந்த நேரத்தில் கற்பனைத் திறனோடு புதிய குற்றங்களைச் சிருஷ்டித்து வழக்குத் தொடர்ந்து, தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் போலீஸ் இலாகா, செய்யப்படும் குற்றத்தைப் பற்றிச் சேதி கிடைத்தவுடனே, பறந்தது; விரைந்தது. சேதி சொன்னவனையும் துணைக்கு அழைத்துக்கொண்டது. காட்டிக்கொடுப்பவனையும் மாட்டிவைப்பதுதானே போலீஸ் இலாகாவின் தர்மம்! வழக்குக்குச் சாட்சியாக வரும் அவனைக் கூட அழைத்துக் கொண்டு போலீஸார் அந்தச் சந்துக்கு வந்தார்கள். கதவில் பூட்டப்பட்டிருந்த பூட்டை உடைத்தார்கள். உள்ளே பதறியபடி நின்று கொண்டிருந்த சரசு, போலீஸாரைக் கண்டதும் மனம் தெளிந்தாள். 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டாள். உள்ளே வந்த போலீஸார் ஒவ்வொன்றாகத் துழாவி ஆராய்ந்தனர். அடிபட்டுக் கிடந்த வாலிபனைப் புரட்டிப் பார்த்தனர். அவனை முழுக்க சோதித்தனர். இறுதியில், அவன் இறந்துவிட்டதாக சப்-இன்ஸ்பெக்டர் கூறினார். அதுவரை அவன் மயங்கியிருப்பதாக எண்ணிக்கொண்டிருந்த சரசுவின் நெஞ்சம் துணுக்குற்றது. "இவனை நீதானே அடித்தாய்?" என்று அதிகாரக்குரலில் கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர். பயந்து போன சரசு, 'ஆமாம்' என்று உளறிவிட்டாள். இவளைக் கைது செய்யுங்கள் என்று ஆணை பிறப்பித்தார் சப்-இன்ஸ்பெக்டர். தான் அடித்ததற்குக் காரணத்தைச் சொல்ல வாயெடுத்தாள் சரசு. "அதெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் வந்து பேசிக்கொள்" என்று கூறிவிட்டார் அவர். சரசுவின் கைகளிலே விலங்கு மாட்டப்பட்டது. செத்துக்கிடந்த வாலிபனைப் போலீஸார் லாரியில் ஏற்றினார்கள். லாரி பறந்தது. அவர்கள் போன பிற்பாடு முதலில் சரசுவை மயக்கிய ரௌடிகள் அங்கே வந்தார்கள் நிலைமையைப்

கண்ணதாசன்

புரிந்துகொண்டு அங்கே நில்லாமல் நடந்தார்கள்.

தனக்கு நேர்ந்த அவமானத்தையும், தான் கைது செய்யப்பட நேர்ந்ததையும் எண்ணிக் கண்ணீர் சிந்தியபடி, ஸ்டேஷனிலே அமர்ந்திருந்தாள் சரசு. வழக்கை ஜோடிப்பதற்கு போலீஸார் அவள் வாக்குமூலத்தைக் கோரினார்கள். ஆதி முதல் அந்தம் வரை நடந்ததை ஒன்றுவிடாமல் கூறினாள் அவள். ஆனால் அதை நம்பாதவர்கள் போல் நடித்த போலீஸார் ஒரு புதிய கதையை அவளிடம் சொல்லி, அந்தக் கதைக்குச் சம்மதிக்கும்படி அவளை மிரட்டினார்கள். அதாவது, விபச்சாரம் செய்வதுதான் அவள் தொழிலாம். வெகு நாட்களாகவே தொழில் புரிந்து கொண்டுதானிருக்கிறாளாம். அந்த வாலிபன் அவளைத் தேடி வந்தானாம். வந்தவனிடம் நிறையப் பணம் இருந்ததாம். அதைப் பறித்துக் கொண்டு அவனைக் கொன்றுவிட்டாளாம்! இந்தக் கதையைக் கேட்ட சரசு, 'ஐய்யய்யோ!' என்று அலறிவிட்டாள். தன் வீடு முன்பக்கம் பூட்டப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, 'நான் செய்திருக்க முடியுமா!' என்று கேட்டாள். தான் இருந்த வீட்டில் ஏதாவது பணம் இருந்து பார்த்தீர்களா என்று கேட்டாள். தான் பெரிய இடத்துப் பெண் என்றும், தேசானந்தரின் தங்கையென்றும் கூறினாள். அவள் சொன்னதெல்லாம் சரி என்று பட்டாலும், சோடனைக்கு அதில் சரக்கில்லை என்று கருதிய போலீஸார் தங்கள் வழிக்கே அவளை இழுக்க முயன்றனர். தாங்கள் சோடிக்கும் வழக்குக்குத்தான் அந்தச் சந்தில் அதிகம் சாட்சிகள் கிடைப்பார்கள் என்பதாலேயே குற்றம் சாட்டப்பட்டவளையும் சம்மதிக்கத் தூண்டினார்கள். "இங்கேயே, இப்பொழுதே, நாம் செத்துவிடக் கூடாதா", என்று எண்ணமிடுகிற அளவுக்கு, சரசுவைக் கவலை கவ்வியது. தர்க்கத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பான காரியங்களையும் தவறுகள் என்று நன்கு தெரியக் கூடியவற்றையும் மிகச் சுலபமாகச் செய்துவிடுவதே வெள்ளைக்காரன் காலத்திய போலீஸ் இலாகாவின் வேலை. குற்றம் புரிந்தவர்களிடத்தில் கூட, கருணை காட்டவேண்டிய மனிதன், குற்றம் புரியாதவர்களிடத்தில்கூட, கொடுமையாக நடந்துகொள்கிறான் போலீஸ்காரன் ஆகிவிட்டால். அந்த உத்தியோகத்திற்கு அது இயற்கை. எவ்வளவுக்கெவ்வளவு கடுமையாக நடந்துகொள்கிறானே, அவ்வளவுக் கவ்வளவு உத்தியோகம் உயரும். கடுகடுப்பான முகம் தான் அந்த உத்தியோகத்தின் இலக்கணம். மற்ற மனிதர்களுக்கு பயம் ஏற்படவேண்டும் என்பதற்காகவே சில மனிதர்களுக்கு மிருக குணத்தை ஊட்டி வைக்கிறது அரசாங்கம். பொய்யை மெய்போலக் காட்ட வைக்கிறது. மெய்யைப் பொய் யென்று சாதிக்க வைக்கிறது. வயிறு என்ற ஒன்று இருப்பதால் மனதைக் கல்லாக மாற்றிக் கொள்கிறான் அந்த உத்தியோகத்துக்குப் போனவன். இதுமாதிரி வழக்குகளில் வழக்கின் தன்மையைக் காட்டிலும் தங்களுடைய திறமை அதிகம் என்பதை நீதி பதிக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிக்கவேண்டு மென்பதே போலீஸார்கடைப்பிடிக்கும் சித்தாந்தம். அதனுல்தான் வழக்கின் இயற்கை நிலையை அறிந்தும்கூட, அதை மாற்றி சரசுவைக் குற்றவாளியாக்கிவிட அவர்கள் முயன்றார்கள். அவளது பிறப்பு, வளர்ப்பு, குணம், நிலை முதலியவை நிரூபிக்கப்பட்டால் போலீஸார் சோடிக்கும் வழக்கு, பொய்யாகிவிடும். பொய்யாவதற்கு நியாயம் உண்டு என்பது தெரிந்தும், தங்கள் சாதனையில் நம்பிக்கை வைத்த போலீஸார் அவளைத் தூண்டிக்கொண்டிருந்தார்கள். பிறகு துன்புறுத்தவும் தொடங்கினார்கள். தாளமுடியாத சரசு, தான் திட்டமிட்டுக் கொலைபுரிந்ததாகவே ஒப்புக் கொண்டுவிட்டாள். போலீஸார் தாங்கள் சொன்ன கதையை அவளது வாக்குமூலமாகவே எழுதி, அவளிடம் கையெழுத்தும் வாங்கிவிட்டார்கள். பிறகு, இறந்துபோனவன், யார் என்பதைப் பற்றிய ஆராய்ச்சி நடந்தது. அவன் பையிலிருந்த சில கடிதங்களைச் சோதித்தார்கள்.

இதற்கிடையில் தேசானந்தர் கவலையில் மூழ்கிக் கிடந்தார். ஓடிப்போனதால் தங்கையின் மீது ஆத்திரம் ஏற்பட்டாலும், பாச உணர்ச்சியால் நிலைகுலைந்தார். எப்படியும் அவளைத் தேடிக் கண்டுபிடிப்பது என்று புறப்பட்டார். புறப்பட்டு எங்கே போவது? சென்னைக்கே வந்து சேர்ந்தார். எழும்பூர் புகை வண்டி நிலையத்தில், இறங்கியதும் இறங்காததுமாக, ஒரு தினசரிப் பத்திரிகையை வாங்கிப் பிரித்தார். கொலைச் செய்திகளைப் பரபரப்பாகப் பிரசுரிக்கும் அந்தப் பத்திரிகை, சரசுவைப் பற்றிய செய்தியையும் வெளியிட்டிருந்தது. அவள் விபச்சாரம் நடத்தியதாகக் கூறப்படுகிறது, என்றும் போட்டிருந்தது. தேசானந்தரின் மான உணர்ச்சி துடித்தது. தன் தங்கைதானு அவள்? அவளா இப்படி ஆகியிருப்பாள்? அவருக்குப் புரியவில்லை! முழுக்கப் படித்தார். கொல்லப்பட்டவன் பேரைப் படித்ததும் ஒரு கணம் அவர் மூச்சு நின்றது. இறந்தவன் பெரிய இடத்துப் பிள்ளையாம். பெயர் சூடாமணியாம்.

1-1-'57 ஜனவரித் திங்கள் முதல் நாள்!
தென்னகமெங்கும் பொன்னுன கருத்துக்கதிர்களை வீசிப்
புத்தொளி பரப்பும் உன்னத ஏடு உலவிடத் துவங்கும் நன்னுள்!
★ உதய சூரியன் ★
(தி. மு. க. திங்கள் ஏடு)
ஆசிரியர் : இ. ல. ம. சௌந்திரபாண்டியன்
விலை : நான்கு அணு.
இதழ் ஒன்றுக்கு நான்கு அணு விதம் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.
— விவரங்களுக்கு —
பொறுப்பாளர் : உதயசூரியன், கமுதி, இராமநாதபுரம்.

விற்பனையாகிறது!
டி. பி. சந்திரன் எழுதிய
பட உலகிலே
சூஜாக்கள்
விலை அணு 5.
ஏஜண்டுகளுக்கு 20% கழிவு உண்டு. முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.
-: விபரங்களுக்கு :-
சேகர் பதிப்பகம்,
17, முத்துமாரி செட்டி தெரு,
சென்னை-1.

அடுத்த இதழில் :
★
தேர்தல் வருகிறது;
தெரிந்து
கொள்ளுங்கள்!
★
8 - ?

ராம் ரேடியோ சர்வீஸ்
டீலர்ஸ் அண்ட் இஞ்சினியர்ஸ்,
புதுக்கோட்டை
PHILIPS
பிலிப்ஸ்
◉ ரேடியோ
◉ ஒலிபெருக்கிக் கருவி
◉ இன்பிராயில் லாம்ப்
◉ பிலி ஷேவிங் செட்
முதலியவைகள் கிடைக்கும்.
★ விழாக் காலங்களில் ஒலிபெருக்கிகள் சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.
★ ரேடியோக்கள் ஒலிபெருக்கிகள் முதலியவைகள் மிக நல்ல முறையில் சர்வீஸ் செய்து தரப்படும்.
விவரங்களுக்கு :
ராம் ரேடியோ சர்வீஸ்
தபால் பெட்டி நெம்பர் 2.
கீழராஜ வீதி : : புதுக்கோட்டை

மணத்திற்கும், மனத்திற்கும் தொடர்புண்டு

எங்கும் கிடைக்கும்.



தைமூரின் காதலி

★

★ தென்னரசு ★

7

அறிமுகமாகாத பலருக்கு மத்தியில், கன்னிப் பெண்கள் தலை கவிழ்த்து நிற்பதைப் போலிருந்தது அந்தக் குதிரைகளின் சந்திப்பு.

"யார் நீ? இழுப்புக்கு அடங்கிப் பழகாத இளங்குதிரையில் இரவில் சவாரி செய்யக்கூடாது என்பது உனக்குத் தெரியாதா?" கருப்புக் குதிரைக்காரன் அனுதாபத்தோடு கேட்டான் இவ்வாறு. இருவருக்குமிடையிலே இரண்டு கணம் அமைதி நிலவியது.

"இம்! விலகிப் போ! விடியப் போகிறது!"-கருப்புக் குதிரைக்காரன் மறுபடியும் பேச்சை ஆரம்பித்தான். அவனுடைய பேச்சில் ஊறிப்போன வரட்டுக் கவுரவம் முகம் காட்டி நின்றது.

"ஆமாம், விடியப் போகிறது; இரவின் அத்தியாயமும் முடியப் போகிறது. துரோகிகளும், திருடர்களும் தானே விடியக்கூடாது என்பார்கள்; துருக்கிய வீரனைப் போல் இருக்கிறீரே, விடிந்தால் உமக்கென்ன ஆபத்து?—வெள்ளைக் குதிரைக்காரன் காரமாகப் பதில் சொன்னான்.

ஏதாகிலும் பதில் சொல்லுவானென்று வெண்குதிரை வீரன் எதிர்பார்த்தான். அவன் பதில் பேசவில்லை. கையிலிருந்த குதிரைச் சவுக்கால் 'சுளீர்' என்று அடித்துவிட்டான்.

"துரோகி! உளவறியப் போவதாகச் சென்று ஊர் கெடுக்கத் திட்டமிட்டு வந்திருப்பவனே! நிலவு உன் செயலுக்காக மேகத்தின் மறைவில் நின்று அழுதுகொண்டிருக்கிறது பார். தலைநகரத்தைக் கவனி! நிதானித்துக் கவனி! பார்த்தவுடன் உனக்கு இருள்தான் தெரியும்! இருளிலே தெரியும் ஒரு மங்கலான வெளிச்சம்! அந்த விளக்கிலே சாம்பல் பூத்தாற்போல் தெரியும் தலைநகரம்! ஆண்டாண்டுக் காலமாக அரியாசனத்தி லிருந்து கொலுவிருந்த திருநாட்டை, கேவலம், உன்னுடைய பெருவாழ்வுக்காக சிதறடிக்கச் திட்டமிட்டு விட்டாய்! துரோகத்தால் கிடைக்கும் சுகம், தாசிதரும் இன்பம்! நிரந்தரமற்றது; சுற்றிலும் பயம் நிறைந்தது"—வெள்ளைக் குதிரைக்காரன் அடுக்கினான். அதே நேரத்தில் எதிரே நின்று கேட்டுக்கொண்டிருந்த துருக்கிய வீரன் மெதுவாகத் தன் குத்து வாளை உருவு வதையும் அவன் பார்த்துக்கொண்டு தானிருந்தான்.

"என்னுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்! கொல்ல நினைப்பது பிறகிருக்கட்டும்" என்ற சொல்லிக்கொண்டே தற்காப்புக்காக வெள்ளைக் குதிரைக்காரனும் வாளை உருவினான். அதே வாள் இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு துருக்கிய வீரனைச் சாய்த்துவிட்டது. துரோகியைக் கொன்றுவிட்டோம் என்ற பெருமையோடு வெள்ளைக் குதிரைக்காரன் மறைந்துவிட்டான்.

மறுநாள் காலை துருக்கிய தலைநகரம் சாவு வீடாக இருந்தது. 'துருக்கியப் படையின் முன்னோடியாக விளங்கிய ஜாபர் அலி கொலை செய்யப்பட்டான் என்ற சேதி நகரெங்கும் பரவியது. அரண்மனையில் அனுதாபம் தெரிவித்தார்கள்.'

—உம்மதுல் இந்த இடத்தில் கவலையோடு கதையைச் சொன்னாள். உடனே யஜ்தானி, "உம்மதுல்! உம்மதுல்! என் ஜாபர் அலி துரோகியா? சிறுபிள்ளைத் தனமாகப் பேசாதே! அவன் எனது வலது கை! நான் கிழித்த கோட்டைத் தாண்டியதில்லை! ஐயய்யோ! அவனையா துரோகி என்கிறாய்! இல்லை! இல்லை! இல்லை! ...உம்மதுல்! அலியைக் கொன்றவன் எங்கே! சொல்! அவன் எங்கே இருக்கிறான்? அவனது உதிரத்தை வடித்து அலியின் சமாதிக்குச் சாயம் பூசுகிறேன்! சொல் உம்மதுல்! உம்மதுல்!"—யஜ்தானி தாங்கொணாத் துயரத்தில் மயங்கி விழுந்தான்.

தந்தையின் புலம்பலால் உம்மதுலின் இதயத்தை நெருங்கக்கூட முடியவில்லை. சேமியா கணவனின் முகத்தில் பன்னீரைத் தெளித்தாள். மயில் தோகை விசிறிகொண்டு விசிறினாள். கள்ளுண்டவனைப் போலத் தடுமாற்றத்துடன் யஜ்தானி பேசினான்: "ஏன் உம்மதுல், என் ஜாபர் அலியையா துரோகி என்கிறாய்? நம்ப முடியவில்லை கண்ணே! நாட்டுக்குழைத்தான், நல்ல பெயர் எடுத்தான்! அவனா துரோகியாகிவிட்டான்! என் மனம் நம்பாது!"

"நம்பாது! நான் சொன்னால் நம்பமாட்டீர்கள்; அவனுடைய காதலியைக் கேட்டுப் பாருங்கள்!"—உம்மதுல் சொன்னாள்.

"சொல்! எங்கே இருக்கிறாள் அவள்?"—யஜ்தானி கெஞ்சினான் மகளிடம்.

"அவள் சாகவில்லை. காதலன் இறந்துவிட்டான் என்பதற்காகத் தற்கொலை செய்து கொண்டு விடவில்லை. தன் இதயத்தைக் கவர்ந்தவன், வாழ்க்கைக்குத் தலைவனாகவேண்டியவன் துரோகியாகி விட்டான்,—தப்பித்தேன் என்று பூரித்து இருக்கிறாள் அவள்! இன்னொன்றையும் சொல்லி வைக்கிறேன்; தயவு செய்து இதயத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள் தந்தையே! அவனைக் கொன்றவரும் அவனுடைய காதலியேதான்! நம்பமாட்டீர்கள்; வெள்ளைக் குதிரையில் பின்தொடர்ந்து தன் காதலனுக்கு மெய்க்காப்பாளனாகப் போனவள், அங்கே கூடாரத்திற்குள் நடைபெற்ற உரையாடலைக் கேட்டபின்பு அவளே கூற்றுவனாகிவிட்டாள். வழிமறித்துக் கொன்று விட்டாள். அவளும் துருக்கியப் பெண்தான். ஜாபர் அலி வணங்கிய முடிக்குத்தான் அவளும் தலை வணங்கினாள். அவள்தான் காதலனையே கொன்று விட்டாள்!"—உம்மதுலின் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது.

"உம்மதுல்! கதையை வளர்க்காதே! ஜாபர் அலி துரோகியானால், அவன் துருக்கியின்பகைவனானால், அவனைக் கொன்ற உத்தமிக்கு ஆலயம் எழுப்புகிறேன். அவளைப் போற்றிப் பூஜிக்கிறேன். சொல் உம்மதுல்!" என்று கூவினான் யஜ்தானி.

உம்மதுல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வேறு பக்கம் திரும்பினாள். கூந்தல் அவிழ்ந்து விட்டது!

"உம்மதுல்! என்னை ஏன் கொல்லுகிறாய்! சொல்லம்மா!" என்று அவள் பக்கம் வந்தான்.

"ஜாபர் அலியைக் கொன்றவள் துருக்கியப் பிரதம சேனாதிபதியின் மகள் உம்மதுல் தான்."

"ஐயோ உம்மதுல்!" என்று கதறினான். யஜ்தானி 'தடார்' என்று ஒரு பெரிய சத்தம் கேட்டது. உம்மதுல் திரும்பிப் பார்த்தாள்.

(தொடரும்)

தினசரி பொதுமக்களுக்கு வேண்டிய உடன் குணப்படுத்தும் ஓர் சிறந்த மருந்து!

ராம்பென் பெயின்பாம்

தலைவலி, ஜலதோஷம், காய்ச்சல், உடல்வலி முதலியவைகளைக் குணப்படுத்துவதில் தலை சிறந்தது!

ராம்பென் பெயின்பாம்

எல்லோர் இல்லத்திலும் என்றும் இருக்கவேண்டிய ஒன்று!!

ராம்பென் பெயின்பாம்

தயாரிப்பாளர்: ராம்பென் பர்மஸூடிக்கல்ஸ், பெங்களூர்-4.

— முழு விற்பனை உரிமையாளர் —

மெடிகல் யூனியன்,

போன் எண்:—91. தந்தி: LIVOMAZ தபால் பெட்டி எண்: 38.

கீழராச வீதி :: புதுக்கோட்டை

என் சரிதை...

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

13, 14-வது வயதிலிருந்து பிரபலமாக நாதசுவரக் கச்சேரிகளுக்கு வெளியூர் போனாலும் இரவு 4 மணிக்கு எழுந்து நாதசுவர சாதகம் செய்துவருகிறேன். நாதசுவரத்தில் ஒரே மூச்சில் தசவித கமகக்குழைவோடு 10 ஆவர்த்தம் திரிஸ்தாயிகளிலும் பிர்க்காக்களை பிடித்துப் பார்த்துக்கொண்டேயிருப்பேன். திரு. சின்னப்பக்கிரி நாதசுவரக்காரர் வாத்தியத்தை நான் கேட்டதிலிருந்துதான் திருந்தி புதுமாதிரிக் கற்பனைகளோடு வாசிக்க ஆரம்பித்தேன். என்னை இவ்விதமான நிலைமைக்குக் கொண்டுவந்தவர்கள் திருப்பெருந்திரு சன்னிதானமவர்களும் கார்வார் திரு. சு. பொன்னு பிள்ளை யவர்களுமேதான். அப்போது சில சமயங்களில் திருப்பெருந்திரு சன்னிதானமவர்கள் கார்வார் திரு. சு. பொன்னு பிள்ளையிடம் 'நாதசுவரம் வாசிப்பதில் நமது ராஜரத்தினத்தைவிட மிஞ்சியவர்கள் எவரும் இருக்கக் கூடாது. அப்படி அவனை முன்னணிக்குக் கொண்டுவரவேண்டும்' என்று சொல்லுவார்கள்.

என்னுடைய 14-வது வயதில் நீடாமங்கலம் தவில் வித்துவான் திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளைக்கு விவாகம் நடந்தபோது நாதசுவரம் வாசித்தேன். ஒருநாள் வாய்ப்பாட்டுக் கச்சேரியும் செய்தேன். திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையின் சிறிய தகப்பனாரும் தஞ்சையில் மார்க்கட்டில் பிரபல வியாபாரியும் ஆகிய சாமிநாத பிள்ளையின் குமாரியும் தற்போது பிரபல காங்கிரஸ்வாதியான பி. எஸ். வேங்கட கிருஷ்ண பிள்ளையின் சகோதரியுமான சாரதாம்பாள் என்ற எட்டு வயதுப் பெண்ணை எனக்கு விவாகம் செய்ய நீடாமங்கலத்திலேயே முடிவு செய்யப்பட்டு ஆனந்த வருடம் ஆவணி மாதம் 12-ம் தேதி எனக்கும் சாரதாம்பாளுக்கும் வெகு விமரிசையாய் நான்கு நாட்கள் கல்யாணம் நடந்தது. பல வித்துவான்களும், மன்னார்குடி திரு. சின்னப்பக்கிரி நாதசுவரக்காரரும் கல்யாணத்தில் வாசித்தனர். பிறகு அநேக இளம் பாட்கிகளுக்கும் சிக்ஷகளும் சொல்லி வைத்துக் கொண்டிருந்தேன். அப்போது பணக்காரர்கள் நாதசுவர வித்துவான்களை ராக்ஷசத் தன்மையுடன் நடத்தினார்கள். வெயிலோ, மழையோ, நடுநிசியோ எப்போதும் வாசிக்க வேண்டும் என்ற கொடுங்கோன்மையான வழக்கமிருந்தது. நான் ஆரம்ப முதலே உழைப்பின் உரிமையையும் ஊதியத்தையும் பெறவும், முதலாளிவர்க்கத்தை ஒழிக்கவும் மனத்தைத் திடஞ் செய்துகொண்டேன். நாதசுவர வித்துவான்களை நரக வாழ்வினின்று நவ உலகத்திற்குக் கொண்டுவரவே பாடுபட்டுள்ளேன். பணம் படைத்த திமிர், அதிகார மமதை, அதன் ஆதிக்கம், அட்டூழியம் இவற்றை அறவே ஒழித்து நாதசுவர உலகிற்குச் சிறந்த தொண்டுபுரிந்தேன். ஏழை பணக்காரர் என்று வித்தியாசம் பாராட்டவில்லை. எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் லட்சியம் செய்யாமல் இருந்தேன். இதிலிருந்து, மமதை பிடித்த பணவெறியர்கள் எனக்குப் பலவழிகளிலும் இடைஞ்சல் செய்தனர். இதற்கெல்லாம் நான் பயப்படுகிறவன் அல்ல. பயந்தால், உலகுக்கு என்னால் பயனேற்படாது. தவிரவும் நாதசுவர உலகம் விமோசனம் அடையவேண்டும்.

மைசூரில் பல வருஷம் தசராப் பண்டிகைக்குச் சென்று வாசித்தேன். நிறைய சம்பாவனைகளையும் பெற்றேன். இருந்தும் பயன் என்ன? எனக்குச் சந்தோஷம் வரும்போதல்லவா, மன்னர் கேட்கவேண்டும்? யானையின் பேரில் மன்னர்! மண்ணில் நின்று நாதசுவரம்! இதை உணர்ந்தேன். அமரகவி பாரதியார் பாடிய "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற கவிதையை நினைவு கொண்டேன். மைசூருக்குப் போவதையும் ஒழித்துவிட்டேன். பல இடங்களில் என் சௌகரியப்படி நடந்து கொண்டவர்களுக்கு நன்றாகவே கச்சேரி செய்து வந்திருக்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஓர் ஊரில் ஒரு ஊர்வலத்திற்குச் சென்றிருந்தேன். என் மனைவி சாரதாம்பாளையும் அழைத்துப் போயிருந்தேன். சங்கீத வித்துவான், காலஞ்சென்ற திரு. எஸ். ஜி. கிட்டப்பா அய்யரும் என்னுடனிருந்தார். திரு. கிட்டப்பா அவர்களுக்குப் பெண்கொடுத்த மாமனார் வீட்டில் ஜாகை. இரவு பாளையங்கோட்டையில் ஒரு பணக்காரர் வீட்டில் என் கச்சேரி. இரவு 8 மணிக்கு ஊர்வலம் கிளம்பியது. இரவு ஒரு மணிவரைதான் வாசிப்போம், என்று பேசி 'அட்வான்ஸ்' வாங்கியிருந்தேன். ஒரு மணி ஆயிற்று; இரண்டு மணி; மூன்று மணி; கலியாண வீட்டுக்காரர் விடவில்லை. எனக்கு உதவி நாதசுரம் வாசிக்க வந்த எனது மருமகன் நடராஜ சுந்தரத்தையும் என் தவுல்காரர்களையும் பார்த்து ஊர்வலத்தை வீட்டில் கொண்டு போய் விட்டுவிடுங்கள் என்று சொல்லிவிட்டு நான் காரில் ஏறி வீரராகவபுரம் (திருநெல்வேலி) போய்ச் சேர்ந்து, கிட்டப்பா அய்யரை எழுப்பிப் பேசிக்கொண்டிருந்தேன். விடிய ஒரு நாழிகை இருக்கும். பாளையங்கோட்டையிலிருந்து ஒரு ஆள் வந்து என்னிடம், உதவி வாத்தியக்காரர், தவில்காரர் எல்லோரையும் ஒரு வீட்டில்போட்டுப் பூட்டிவிட்டார்களென்று சொன்னார். 'ஒரு நிமிஷம் பொறு' என்று மோட்டார் வண்டியை எடுத்துக்கொண்டு போனார் கிட்டப்பா அய்யர். சிறிது நேரங் கழித்து ஒரு லாரி நிறையப் போலீஸ், ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் உட்பட என்னிடம் வந்து என்னைக் காரில் ஏறச்சொன்னார்கள். உடனே பாளையங்கோட்டை சென்றோம். கலியாணக்காரர் ஓடி ஒளிந்துவிட்டார். இதற்குள் எங்கள் மனிதர்களும் வந்து விபரம் சொன்னார்கள். உடனே கலியாணக்காரரைப் போலீசார் கொண்டு வந்து சேர்த்தனர். அவர் கைது செய்யப்பட்டு, பாதுகாப்பில் வைக்கப்பட்டார். எங்களுக்குப் பேசிய பணத்தைவிட அதிகமாக ரூபாய் ஆயிரம் கிடைத்தது. இப்படிப் பல சம்பவங்களும் என் வாழ்க்கையில் நடைபெற்றிருக்கின்றன.

எனக்கு வயது 25 ஆனதும் என் உறவினர்களும், மற்றும் சுற்றத்தார்களும் எனது புத்திரனில்லாக் குறைக்காக வருந்த, எனது முதல் மனைவியாகிய சாரதாம்பாளும் மற்றொரு விவாகம் செய்ய வேண்டுமென்று பிடிவாதம் செய்ததால் மதுரையில் நாதசுர வித்துவான் திரு. செல்லையா பிள்ளையின் குமாரி சுப்புத்தாயியை எனக்கு விவாகம் செய்து வைத்தனர். அதன் பிறகு 5, 6 வருடமாகியும் இரண்டாம் மனைவிக்கும் குழந்தைப் பேறு இல்லாமல் போகவே, என் முதல் மனைவி மறுபடியும் விவாகம் செய்ய ஏற்பாடு செய்யவே விருத்தாசலத்திற்கு அடுத்த பெண்ணாடம் என்ற ஊரில் ஜனகம் என்ற பெண்ணையும் கல்யாணம் செய்துவைத்தனர். இதன் மத்தியில் என் முதல் மனைவி, சாரதாம்பாள் கர்ப்பமுற்று ஒரு வருடமாகியும், குழந்தை பிறவாததால் டாக்டர்கள் கட்டியென்று சொல்லிவிட்டார்கள். உடனே சென்னைக்குக் குடும்பத்தோடு சென்றோம். அப்போது திரு. டாக்டர் ராஜன் அவர்கள் மந்திரியாக இருந்தார்கள். அவரிடம் காட்டியதில் 'என்னிடம் பார்ப்பதைவிட டாக்டர் ஏ. லெக்ஷ்மணசாமி முதலியாரிடம் பாருங்கள்' என்று சொல்லிவிட்டார்கள். கனம் லெக்ஷ்மணசாமி முதலியாரவர்கள், சிறிது நாள் கழித்து பெரிய ஆப்பரேஷன் செய்தார்கள். அதில் பெரியதொரு கட்டியோடு கூடவே ஒரு ஆண் குழந்தையும் இருந்தது. ஆஸ்பத்திரி பூராவும் ஒரே கோலாகலமாகவும், சந்தோஷமாகவும் காணப்பட்டது. குழந்தையும், தாயும் மூன்று மாத காலம் டாக்டரவர்கள் பார்வையிலேயே இருந்தனர். பிறகு திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தோம். அப்பொழுதான் சினிமாக்காரர்கள் காளமேகம் படத்திற்கு என்னை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் போனார்கள். இரண்டு வருடம் சென்னையிலிருந்துவிட்டு திருவாவடுதுறைக்கு வந்து வழக்கப்படி நாதசுரக் கச்சேரிகளை நடத்தி வரலானேன்.

சில காலங்களுக்கு முன் வெள்ளி நாதசுரம், தங்க நாதசுரம் என்றெல்லாம் பெரிய வித்துவான்களிடம் இருந்து வந்தன. நாதஸ்வர சுருதியும் 5 கட்டை, 4 கட்டையாக

— 5-ம் பக்கம் —

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி

சித்த வைத்தியசாலை.

56 வருட அனுபவம் பெற்றது.

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெற்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெற்பம் தரிக்க வேண்டுமானால் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0.

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனாம்.

பிரதம வைத்தியர் & மானேஜர் :—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமண்ய ஓம்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்தவைத்தியசாலை,

தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ. 219) பழநி. (S.I.)

நெற்றிக்கண்

நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே என்னும் மொழியில் பொதிந்துள்ள கதை வெறும் புனைந்துரை மட்டுமன்று; நமக்கும் நக்கீரனுக்கும் பெரும் பழியைத் தரவல்ல பொல்லாத புனைந்துரையாகும் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. 'நெல்லைச் சித்தன்' என்ற புனைபெயரில் ஒளிந்திருக்கும் இங்கக் கட்டுரையாளர் நாடறிந்த தமிழ்ப் பேராசிரியராவார்.

"நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே"—'பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கும் பரம்பொருளே செய்ததாயினும், தவறு திருத்தமாகாது' என்னும் பாடத்தை உரைத்தும் இத்தொடர், ஏடு தொட்டும் அறியா ஏழை முதல் நாடுகட்டி ஆளும் பேறு பெற்றோர் வரை பலராலும் எடுத்தாளப்படுகிறது. செய்பவர் எவர் என்பதன்று, செய்யப்பட்டது ஏது என்பதே சிந்திக்கப்பட வேண்டியதாகும் என்னும் சீரிய கருத்தினை வலியுறுத்த விழைவோர் எல்லோரும் இத்தொடரையும், இது தோன்றக் காரணமான 'வரலாற்றினை'யும் எடுத்தாள்கின்றனர்.

"'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவு'ளே சீறியபோதும் 'சிறு மாமனிசரா'கிய நக்கீரர் சிந்தை கலங்கினர் அல்லர். நெற்றிக் கண்ணையே திறந்து காட்டினார், நீலகண்டர்; நெஞ்சுறுதி குலைந்தார் அல்லர், நக்கீரர். நேரிழையார் கூந்தல் இயற்கை மணம் இல்லாதது என்றே சொல்லாடினார். எண்ணிப் பாருங்கள். எதனைக் காட்டுகிறது, இந்நிகழ்ச்சி? கொள்கை மாறாத நெஞ்சுறுதியும், குற்றம் கண்டபோது கடிந்துரைக்கும் அஞ்சாமையும் கொண்டிருந்த பண்டைத் தமிழ்ப் புலவர் பண்பினை உணர்த்தவில்லையா? என்னே பழந்தமிழர் பண்பாடு!"—இவ்வாறெல்லாம் எண்ணியும் கூறியும் இறும்பூது எய்துவோர் பலர். அவர்தம் இறும்பூது அகமகிழ்ச்சி அளிக்கிறது; அருமைத் தமிழரின் அஞ்சாமையினையும் துணிவையும் அறிகிறபோது பெருமிதம் கொள்கிறோம்; 'நக்கீரர் பரம்பரையினர், நாம்' என்று சொல்லிக் கொள்வதில் பூரிப்படைகிறோம். ஆனால் தமிழரின் நெஞ்சுரத்தையும் நேர்மைத் திறத்தையும் நிலைநாட்டுதற்கு இந்தக் கதைதானா அகப்பட்டது என்னும் நினைவு சில போது தோன்றுகிறது.

பொருளே இல்லாதவன், பெருஞ் செல்வனாகக் காட்சி தரக் கருதுவானாயின் பொய்யும் புனைந்துரைகளுமே புகலாகக் கொள்கிறான். கொள்ளக் கொள்ளக் குறையாத செல்வம் கொண்டோனும் தன் செழிப்பினைப் பிறருக்கு உணர்த்தப் பொய்யையும் புனைசுருட்டினையும் துணைக்கொள்ள வேண்டிய நிலை உண்டா?

"நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்னும் மொழியில் பொதிந்துள்ள வரலாறு வெறும் புனைந்துரை மட்டும் அன்று; உண்மையில் நமக்கும் நக்கீரர்க்கும் பெரும் பழியைத் தரவல்ல பொல்லாத புனைந்துரையாகும். புனைந்துரையால் புகழ்தேட முயல்வோம் என்னும் பழி நம்மைச் சாரும். நக்கீரரைச் சார்வதும், 'உரம் பெற்ற உள்ளத்தினர்' என்னும் பெருமை அன்று; 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்' என்னும் சிறுமையே ஆகும்.

கணக்காயனார் மகனார்க்கும் கண்ணுதற் கடவுளுக்கும் மாறுபாடு தோன்றக் காரணமாயிருந்தது, ஒரு கருத்தே. மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்றாராம், மலைமகள் கொழுநன்; மறுத்துரைத்தாராம், மதுரை நக்கீரர். மாறுபட்ட கருத்துடையவரைக் கொல்லவும் மனங்கொள்ளும் தற்கால அரசியற் புல்லர்போல, மறுப்புக் கண்டு கறுத்தெழுந்த மாதேவர் நெற்றிக் கண்ணைத் திறக்கும் அளவு சென்றாராம். ஏந்திழையர் கூந்தலுக்கு இயற்கை மணமில்லை என நக்கீரர் கருதினர் என்பதுதான் இந்தக் கதைக்கு அடிப்படைக் கல் போன்றது. அதன்மீதுதான் ஒரு வரலாற்றுத் தளமும், அதன்மீது ஒரு பெருமைக் கட்டிடமும் எழுப்பப்பட்டிருக்கின்றன. நக்கீரர் அக்கருத்தினர் அல்லர் எனின், நஞ்சுண்ட கண்டனோடு சொற்போர் நிகழ்த்தி இரார்; நாமும் அவரது அஞ்சாமை பற்றித் துதிபாடமாட்டோம்.

'இயற்கை மணம்' இல்லை என்ற கருத்துடையவர்தாமா நக்கீரர்?-இக் கேள்வியின் விடையினைப் பொறுத்ததுதான், எரிவிழி திறந்த வரலாற்றின் உண்மை.

சங்க நக்கீரர், மங்கையர் கூந்தலுக்கு இயற்கை மணமில்லை என்று கருதியவரா அல்லரா என்பதனைச் சங்க நூல்களின் துணைகொண்டே அறிதல்கூடும். நக்கீரர் பாடிய பாடல்கள் பல நற்றிணை முதலிய நற்றமிழ் நூல்களில் இடம்பெற்றுள்ளன. அப்பாடல்களே நக்கீரரின் உள்ளப் பாங்கினை அறிவிப்பன.

பாடல்களால் நாம் காணும் நக்கீரர், பாவையர் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்னும் கருத்தினரே. கூந்தலைப் பற்றிக் கூறும்போதும், குறுநுதல் பற்றிப் பாடும்போதும், இரண்டினையும் ஒருசேரச் சுட்டும்போதும், அவற்றின் இயற்கை மணத்தை நக்கீரர் அறிவித்திருக்கிறார். நல்லெழில் பெற்ற தலைவி ஒருத்தியை, நக்கீரர், "நறும்பல் கூந்தல் குறுந்தொடி மடந்தை" (அகம்: 36: 11) என அறிமுகப்படுத்துகிறார்; மற்றொருத்தியின் நெற்றியை, "தேம்கமழ் புதுமலர் நாறும் இவள் நுதலே" (அகம்: 78: 24) எனப் போற்றுகிறார்; இன்னொருத்தியின் நெற்றியையும் கூந்தலையும் குறித்து,

> "..................... கூடல்
> நாள்அங் காடி நாறும்
> நறுநுதல்
> நீள்இரும் கூந்தல்"
> (அகம்: 93: 9-11)

எனப் பாடுகிறார். கழகம் வைத்துத் தமிழைக் காத்த மதுரையில், காலைக் கடைத்தெரு பலவகை மலர்களின் மணமும் கமழப் பெறுவதாகும். காலைக் கடைத்தெருவைப் போன்று, தலைவியின் கூந்தல் கவின்மணம் மிகுந்தது என்பதுதான் மேற்குறித்த வரிகளின் கருத்தாகும். நாவலர் நாட்டார் அவர்கள் இயற்றிய உரை இதனைத் தெளிவுபடுத்துகிறது. எனவே நங்கையர் கூந்தல் இயற்கை மணமுடையதென்றே நக்கீரர் கருதியவர் ஆவர்.

'இயற்கை மணத்'தைப் பாக்களில் அமைத்துப் பாடிய நக்கீரரே, இறைவனோடு சொற்போர் புரியுங் காலத்து, இல்லையென்று கூறுவாரா? கூறியிருப்பாராயின், 'கொள்கை உரம் பெற்ற நெஞ்சினர்' எனத் தமிழுலகு அவரைப் போற்றியிராது; 'கொண்டது இருப்பக் கண்டது பேசும் கொடியவர்' என்றே தூற்றியிருக்கும்.

"உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர்" போன்ற உரையாசிரியர் எல்லோரும் சங்கப் புலவரைச் "சான்றோர்" என்றே குறிப்பிட்டுள்ளார்கள். நக்கீரர், உள்ளொன்று புறமொன்று கூறியவராயின், சான்றோர் எனச் சிறப்பிக்கப் பட்டிருப்பாரா?

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால், 'இயற்கை மண'மில்லை என இறைவனோடு நக்கீரர் வாதிட்டிரார் என்பது போதரும். எனவே, வாதிட்ட 'வரலாறு' உண்மையென ஒப்புக்கொள்ளுதல், நக்கீரர் பொய்யர் எனச் சொல்லுதலைப் போன்றதே. பொய் வரலாற்றினைப் போற்றுவோர், புலவருக்கு மாசு கற்பிக்கப்படுதலை உணர்வாராக.

—நெல்லைச் சித்தன்.

மாலை அழகு

—◇—

மாலை, மாலை, மாலை!
மறையும் கதிரின் மாலை!
கோலந் திகழும் நீலத் திரையில்
குருதிச் செவ்வான் பரவித் திகழும்
மாலை மாலை மாலை!

அழகே, அழகே, அழகே!
அந்திப் பொழுதின் அழகே!
முழவுக் கடலிற் குழையும் நீலம்
மூழ்கும் கதிரில் வீழும் பொன்நீர்
அழகே அழகே அழகே!

இன்பம் இன்பம் இன்பம்
எழிலார் மாலை இன்பம்!
மின்னும் கொண்டல்! துன்னும் புட்கள்!
மேற்குத் திசையில் ஆர்க்கும் அலைகள்
இன்பம் இன்பம் இன்பம்!

எழிலே, எழிலே, எழிலே!
இயற்கை ஏந்தும் எழிலே
சுழலும் காற்றில் அழலும் தாழை!
சுடர்கொள் கரையிற் படர்கொள் மணல்தான்
எழிலே எழிலே எழிலே!

—ம. தங்கப்பா.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். தமிழகத்திலுள்ள ரேடியோ நிலையங்களில் நடைபெறும் அக்கிரமங்களைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. ஒவ்வொரு துறைக்கு ஒவ்வொரு தயாரிப்பாளர் இருப்பதாகவும், அவர்கள் 'பிரடியூசர்' (**Producer**) என்று அழைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் அந்தத் தயாரிப்பாளர்களுக்கு, அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் துறைகளுக்கேற்பத் திறமை இருக்கிறதா என்று பார்த்தால், ஆச்சாரியார் மருத்துவத்திற்கு யோசனை கூற முன்வந்ததைப் போலத்தான் தோன்றுகிறது.

நாடகத்தைப் பற்றித் தெரியாதவர், நாடகங்களைக் கேலிசெய்தவர், நாடகங்களால் நாட்டுக்கு என்ன விளையும் என்று கேள்விக்குறி போட்டவர் நாடகத் தயாரிப்பாளராக இருக்கிறார். அவர் வேறு துறையில் வல்லவராக இருக்கலாம். அதுபற்றி இங்கே சிக்கலில்லை. அதைப் போலவே ரேடியோ நிலையத்தில் தமிழ்ச் சொற்களுக்கு தயாரிப்பாளராக (**Producer**) ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறாராம்! அவர்தான் ரேடியோக்களில் உபயோகிக்கப்படும் சொற்களுக்கு அதிகாரமளிக்கக் கூடியவராம். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடியவர் ஒரு நாவலாசிரியர்—சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ளவர்களின் இதயங்களைத் தொட முடியாத நாவலாசிரியர். அவர்தான் 'வானொலி'யில் தமிழுக்கு '**Authority**'! ரேடியோக்களில் வரும் நாடகங்களின் பெயர்களைப் பார்த்தால் '**அம்மாக் கொண்டு**', '**விச்சுவின் பட்சணம்**' என்று வருகிறது. இந்தப் பெயர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு 'அதாரிட்டி'யாம்! தமிழ் தெரியாதவரைத் தமிழுக்குப் பாதுகாவலராகப் போட்டால் 'அம்மாக் கொண்டு' என்று தானே நாடகங்களுக்குப் பெயர் வரும்!

இவர்களுக்கெல்லாம் ஊதியமோ, கேட்கவேண்டாம்! அவ்வளவு அள்ளித் தருகிறார்கள்! தமிழ்நாட்டு மக்களின் பணத்தையல்லவா பெறுகிறோம், ஆகவே அவர்களுக்குத் துரோகம் நினைக்கலாமா என்று அந்த 'அதாரிடி'களாவது எண்ணிப் பார்க்கவேண்டும்! அதற்கும் வழியைக் காணோம்!

தமிழ்ப் பற்று மிக்க பல கட்சித் தலைவர்களும் இதுபற்றி எடுத்துக் கூறியும் சென்னை அரசியலார் அலட்சியமாக இருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். ஆகவே தங்களைப் போன்ற தமிழ்ப் பற்றுக் கொண்டோராவது இதற்கான பணியில் ஈடுபட வேண்டுமெனத் தமிழ் இளைஞர்கள் சார்பில் மண்டியிட்டு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

தமிழன்பன்

சென்னை - 14.

◉

அன்புள்ள ஆசிரியருக்கு,

அண்மையில் காலம் சென்ற இசைமன்னன் திரு. ராஜரத்தினம் பிள்ளை என்றென்றும் தமிழர்களால் போற்றப்படும் இசைச் செல்வர். அவரது மறைவு தமிழர்களுக்கு,— இசை அபிமானிகளுக்கு,— இசையுலகுக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பு. இசையிலே புரட்சி செய்த அவர், தம் கொள்கைகளையும் புரட்சிகரமாக அமைத்துக் கொண்டார். அவர் திடீரென மறைந்து விட்டார். அவரதுமறைவு பேரதிர்ச்சியைத்தான் தருகிறது.

காலமாவதற்கு இரண்டு தினங்கட்கு முன்புதான் வெளியூரிலே கச்சேரி செய்து வந்திருக்கிறார். ஊர் திரும்பியவுடன் அவர் உயிர் பிரிந்து விட்டது. இனி அவர் போல யார் வருவார்? தமிழ் இசை உலகம் இனி என்ன செய்யப்போகிறதோ தெரியவில்லை?

அத்தகைய பிறவிக் கலைஞரின் நாதசுர வாத்தியத்தை அரசியலார் பொருட்காட்சி சாலையில் வைத்து "அகில உலக நாதசுரச் சக்கரவர்த்தி திரு. ராஜரத்தினம் பிள்ளை அவர்கள் வாசித்து வந்த நாதசுரம் இது" என்று எழுதி வைத்து, பாதுகாக்க வேண்டும். அவ்வாறு செய்தல் மிகமிக அவசியமாகும்.

அன்புள்ள,

கண. அருணாசலன்

காரைக்குடி.

◉

அன்புள்ள ஆசிரியத் தோழருக்கு!

வணக்கம். நான் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு குக்கிராமத்தில் பெரிய தர்மவான்கள் பரம்பரையில் பிறந்தவன் தான்! இந்த நிலையில் இருக்கிறேன் இன்று. நான் பிறந்து இன்றைய வயது 24 வரை பட்ட, படுகின்ற துன்பத்தை மனித உள்ளம் கொண்ட எவராலும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. சுமார் 10 வயதுவரை என் வாழ்க்கை சுமாரான நிலையில் இருந்தது. கல்வி அறிவுள்ளவர்கள் பரம்பரையில் பிறந்ததால் குக்கிராமத்திலிருந்து 20 மைலுக்கப்பாலுள்ள பட்டணத்தில் போய் உயர்நிலைப்பள்ளியில் முதல் படிவத்திலிருந்து படித்து வரலானேன். அச்சமயம் சம்பளப்பணத்துக்கு ஊர் ஓடி வரவேண்டும் அடிக்கடி. மூன்று நான்கு நாட்கள் சென்றும் போகும்போது சம்பளத்துக்குக்கூட இழுவை பரியாகத்தான் இருக்கும். போய்ப் படித்தேன் என் தளரா ஊக்கத்தினால். அந்த நேரம்(47-51) நமது நாட்டில் பெரியதோர் பங்கிட்டு உணவுப்பஞ்ச நேரம். கொஞ்சம் இருந்த நிலத்திலும் தொடர்ந்து மழையின்மையால் விளைவில்லை; மேலும் குடும்பத்தில் சாப்பாட்டுக்கு ஏழு பேர்கள். பள்ளியிறுதித் தேர்வு நெருங்கியதால் நாலைந்து மாதப் பள்ளிச் சம்பளங்களும் உணவு விடுதிப் பணமும் செலுத்தவேண்டும். ஒரு வழியுமின்றி ஊருக்கு வந்தேன். ஊரில் எதிரே ஒரு புண்ணியவதி என் கண்ணீரைப் பார்த்து தன் காதணிகளைக் (தண்டட்டி) கழற்றி அடகு வைத்துப் பணம் கட்டு என்று கொடுத்தார்கள். உடனே ரூ. 60 க்கு ஈடு வைத்து எல்லாவற்றையும் சரி செய்தேன். அடுத்த நாள் அரசினர் பொதுத் தேர்வு (**S. S. L. C.**) ஆரம்பம். எழுதி வெற்றியடைந்தேன். 53 சத விகித எண்களுக்குமேல் எடுத்து, சொந்த ஊருக்கு வந்தால் கடன் தொல்லை. உள்ள நிலத்தை ஈடுவைத்துக் கடன் செலுத்தி, அலைந்தேன் அலைந்தேன் அரசியல் அலுவலகங்களுக்கு வேலை தேடி பசி பட்டினியாய்.

இன்றைய சமதர்ம (சோசலிச பாணி) அரசியலாரின் அக்கிரமங்களைப் பாருங்கள்! நிலவரித் துறையில் இரண்டு மாத வேலை; உடன் வேலை நீக்கல். இந்த நிலையில் குடும்பம் காப்பற்ற வேண்டும்; நான்கு மாதங்களுக்கு வேலையும் தேடி அலையவேண்டும்; (டைப்-ரைட்டிங், புக்கீப்பிங், கமர்சியல் முதலியன தேர்வு) பின் இரண்டு மாதம் வேலை. 1952ல் நில அளவைக்காரர் (சர்வேயர்) வேலை கிடைத்தது. என் அத்தைமகள் எனக்கெனக் காத்துக் கிடந்தாள் நான்கு வருட காலமாக. அத்துடன் திருமணம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. அந்தச் சர்வே இலாக்காவில் ஒரு அறிவு இல்லாதவன், பணக்காரன், ஆள் படை உள்ளவன் முதலியவர்கட்கு, நல்ல சம்பளம், சம்பள உயர்வு செய்வது; என் போன்ற ஏழை வேலை பார்த்தும், பார்க்காதவன் போல் கஷ்டப்பட வேண்டியது. இந்த நிலையில் மூன்று மாதங்களுக்கு ஓர் ஊர் மாற்றுவதுடன் சட்டி, பெட்டி எல்லாம் தூக்கி அலையவேண்டும். 1955வரை மூன்றுண்டு ஊழியத்துக்குள் சுமார் 10 பெரிய ஊர்களுக்கு மாற்றம். சம்பளம் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை.

இதற்கிடையில் இரண்டு பாக்கியங்கள்-குமாரி, செல்வ அரசன் பிறந்தனர். ஓர்நாள் திடீரென கோள் சொல்வதே தொழிலாகக் கொண்ட சில தோழர்கள் நிறைந்த சர்வே குழுவினர் (இராமநாதபுரம் 3 வது சர்வே பார்ட்டி) என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டனர். இந்த ஏழை என்ன செய்யமுடியும்? மனுக்கள் எழுதினேன், தென்னகத்தில் உள்ள பிரபல கம்பெனி, அலுவலகம், வங்கி, பண்ணை முதலியவற்றிற்கெல்லாம். பதில் எல்லாம் 'தற்போது இடமில்லை' என்பது தான். ஆறு மாதம் நாயினும் கேடாக அலைந்ததின்பேரில் ராசபாளையத்தில் ஓர் பிரபல பண்ணையாரிடமிருந்து கடிதம் வந்தது வேலைக்கு. 1956 பிப்ரவரியிலிருந்து போய்ச் சேர்ந்து எல்லோருக்கும் நல்லவனாய் பயபக்தியுடன் செயலாற்றினேன். யார் எனக்குத் தீங்கு செய்தாலும் பொறுத்துக்கொள்பவன். 'ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு' என்ற ஏசுநாதரின் வழியில் நடப்பவன்.

திடீரென 30-9-56 இரவு என்னை வேலையிலிருந்து போகச் சொல்லிவிட்டு கொடைக்கானல் போய்விட்டார், அந்த 600 ஏகர் நிலமுள்ள பண்ணையார். ஆதரவற்ற நானும் குழந்தைகளும், துணைவியும் சொந்த ஊரில் பிழைக்க வழியின்றி ஓர் வீட்டுத் திண்ணையில் ஆதரவின்றி இருக்கின்றோம். வேலை கிடைக்கவில்லை. என் இரு செல்வக் குழந்தைகளைப் பார்த்து மழலை மொழி கேட்டுக் கொண்டிருந்தாலும் பசி எடுக்காது. என் மனைவியின் காது, கால்களில் கிடந்த அத்தனை நகைகளையும் விற்றுவிட்டது, வேலை தேடி அலைந்து. அங்கும் இங்குமாய் ஊர் ஊராக அலைகிறேன்.

கடந்த 16-11-56 ல் மதுரையில் நடந்த இராமநாதபுரம் மாவட்டக் கழக ஓராசிரியர் தேர்வுக்குப் போனேன் வேலை தேடித் தரும் நிலைய அனுமதி அட்டையுடன். தலைவர் என்னை விசாரிக்கும்போது எனக்குக் கண்வலியாய் இருந்ததால் **Defective Vision Medical Certifi cate Produced** என்று தனது செயலாளரிடம் எழுதச் சொன்னதும் என்னைப் போகச் சொல்லிவிட்டார். வேலை வரும் என்று ஏங்கிக் கிடந்த எனக்கு இன்று வரை வரவில்லை. நான் போகாத (இண்டர் வியூ) நேர் பார்வை இல்லை. நம் தமிழகத்தில் 30-10-56ல் (ஊழியர் குழுத்தேர்வு) சர்வீஸ் கமிஷன் பெருவாரியாக எண்கள் கிடைக்குமாறு எழுதியுள்ளேன் இரண்டாம் முறையாக.

நான் வெள்ளாளன் என்பதால் உயர்ந்த சாதியாம்; வேலை சீக்கிரம் வராதாம். இநத அரசாங்கம் செய்வது! ஏழை, பணக்காரன் என்று வித்தியாசம் பார்ப்பதா? வெள்ளாளன், அரிசன் என்பதைப் பார்ப்பதா? இதுவா வகுப்புவாதமற்ற அரசியல்! பணக்காரன் மகன் படித்துத் தேர்ச்சியடையவில்லையாயினும் உடனே வேலை! என் போன்றோர்க்கு இதே நிலைதானா?

ம. சண்முகசுந்தரம்

காக்கூர்,

ராமநாதபுர மாவட்டம்

★

முல்லை

மார்கழி இதழ்

விற்பனையாகிறது.

★

நா. பாண்டுரங்கன், எம். ஏ.

க. அறிவழகன், எம். ஏ.

முடியரசன்

கண்ணதாசன்

ஆகியோரின் கருத்தோவியங்கள் கொண்டது.

★

விலை அணா

4

★—★

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ் நா